# ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 4. அத்தியாயம் 36.

## பிறர்க்காகப் பட்டினி.

பிள்ளைகளையும் பெண்களையும் சரியான நெறியில் பழக்குவதும், போதிப்பதும் எவ்வளவு சிரமமான காரியமென்பதை நாளடைவில் நான் உணர்ந்தேன். நான் உண்மையில் அவர்களுடைய போஷகனாகவும், குருவாகவும் இருக்கவேண்டுமாயின் நான் அவர்களுடைய மனதை என் வழியில் திருப்பவேண்டும். அவர்களுடைய சுக துக்கங்களில் நானும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு நேரிடும் கஷ்டங்களைத் தீர்த்துக்கொள்வதில் நானும் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அவர்களுடைய இளமையில் அவர்கள் செல்லவேண்டிய அறநெறியின் வழியே அவர்களை அழைத்துச் செல்லவும் வேண்டும்.

சிறையிலிருந்து சில சத்தியாக்கிரகிகள் விடுதலை பெற்றவுடன் டால்ஸ்டாய் பண்ணையிலிருந்த பலர் அங்கிருந்து விலகிவிட்டனர். எனவே, அதில் போனிக்ஸைச் சேர்ந்த சிலர் மட்டும் இருந்தபடியால் நான் அவர்களையும் போனிக்ஸுக்கே அனுப்பிவிட்டேன். இப்போதுதான் என் சோதனைகாலம் ஏற்பட்டது. நான் ஜோஹன்ஸ்பர்க்கிலிருந்து போனிக்ஸுக்குப் போய் வந்து கொண்டிருந்தேன். நான் ஒரு முறை ஜோஹன்ஸ்பர்க்கிலிருந்தபோது, ஆசிரமத்திலிருந்த இருவரின் ஒழுக்கக்கேட்டைப் பற்றிய செய்தி எனக்கு எட்டியது. சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தோல்வி ஏற்பட்டதாகவோ, கஷ்டங்கள் ஏற்பட்டதாகவோ கேள்விப்பட்டாலுங்கூட எனக்கு அவ்வளவு விசாரம் ஏற்பட்டிராது. ஆனால், இச்செய்தியைக் கேட்டதும் என் உள்ளம் நடுக்கங்கொண்டது. உடனே நான் ரயிலேறி போனிக்ஸுக்குச் சென்றேன். ஸ்ரீ காலன்பர்க் தான் இவ்விஷயத்தை எனக்கு அறிவித்தராகையாலும் என் உள்ளத்தின் நிலைமையை அறிந்துகொண்டதாலும் அவரும் என்னுடன் வரவேண்டுமென்று விரும்பினர்.

அவ்வாறு போகும் வழியிலேயே எனது கடமையை நான் உணர்ந்துகொண்டேன். ஒரு பையனுடைய நடத்தைக்கும், அவனது ஒழுக்கக்கேட்டுக்கும் அவனது குரு அல்லது போஷகரும் சிறிதளவேனும் பொறுப்பாளியாதல் வேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று. எனவே பிரஸ்தாப விஷயத்தில் என் பொறுப்பையும் நான் அறிந்து கொண்டேன். இவ்விஷயமாக முன்னரே என் மனைவி எனக்கு எச்சரித்திருந்தும் நான் எளியில் நம்பிவிடக்கூடிய சுபாவமுடையவனாதலால் அவளது எச்சரிக்கையைப் பொருட்படுத்தவில்லை. குற்றவாளிகள் செய்த குற்றத்துக்காக நான் தண்டனையை ஏற்றுக் கொள்வதால், அவர்கள் எவ்வளவு அபாரமான குற்றத்தைச் செய்துவிட்டார்களென்பதையும் அதற்காக நான் எவ்வளவு கவலைப்படுகிறேனென்பதையும் அவர்கள் உணரும்படி செய்யவிரும்பினேன். ஆதலின் நான் இக்குற்றத்துக்குப் பரிகாரமாக ஏழு தினங்கள் உபவாசமிருப்பதென்றும், பின்னர் நாலரை மாதங்கள் வரை தினம் ஒரு வேளை ஆகாரத்துடன் இருப்பதென்றும் ஒரு தண்டனையை ஏற்றுக்கொண்டேன். இவ்வாறு செய்யலாகாதென்று ஸ்ரீ. காலன்பர்க் எவ்வளவு சொல்லியும் நான் கேட்கவில்லை. இறுதியில் அவர் இதன் சக்தியை உணர்ந்து தாமும் என்னுடன் இதில் கலந்து கொள்வதாகக் கூறினர். அவரது அன்புளத்தை மறுக்க என்னால் முடியவில்லை.

நான் இவ்வாறு தீர்மானித்துக் கொண்டதால் என் உள்ளத்தில் தோன்றியிருந்த கவலை ஒருவாறு தொலைந்தது. மேலும், குற்றவாளிகளிடம் [illegible]

கோபம் தணிந்து அவர்கள் பால் என் பரிசுத்தமான அனுதாபம் காட்டினேன். இத்தகைய மன அமைதியுடன் போனிக்ஸ் போய்ச் சேர்ந்தேன். அங்கு பலரை விசாரித்து எனக்குத் தேவையான விஷயங்களை அறிந்து கொண்டேன். நான் ஏற்றுக் கொண்ட தண்டனையால் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் பாவம் செய்வது எவ்வளவு குற்றமானதென்பதை நன்கு அறிந்து கொண்டதுடன், அது எங்களிடையே அதிக பாசத்தையும் உண்டாக்கி விட்டது. இப்பிரஸ்தாப விஷயமாக நடைபெற்ற ஒரு சம்பவத்தால் நான் பதினான்கு தினங்கள் உபவாச விரதம் ஏற்க நேரிட்டது. அதனால் நான் எதிர்பார்த்ததைக் காட்டினும் அதிகமான பயனே விளைந்தது.

இதனால் மாணவர்கள் யாரேனும் ஒழுக்கஹீனமாக நடந்துகொண்டால் அதற்காக அம்மாணவர்களின் உபாத்தியாயர் உபவாச விரதம் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று நான் கூறுவதாக நினைக்கக் கூடாது. எனினும் இத்தகைய அபாரமான முறையைப் பின்பற்ற வேண்டிய காலத்தில் பின்வாங்காமல் அதை அனுஷ்டிக்க வேண்டுமென்பதை வற்புறுத்துகிறேன். ஆனால் ஆசிரியருக்கும், மாணவனுக்கு மிடையில் உண்மையான அன்பு இல்லாத போதும், மாணவனின் ஒழுக்கஹீனம் ஆசிரியருக்கு உண்மையான விசாரத்தை உண்டாக்காத போதும், மாணவன் ஆசிரியரிடம் தக்க பக்தியைப் பெறாத போதும் உபவாசம் ஏற்பதால் பயனும் விளையாமற்போவதுடன், சிற்சில சமயங்களில் தீமையையும் உண்டாக்கி விடலாம். மேலும் இத்தகைய சந்தர்ப்பங்களில் உபவாசம் செய்யாமற்போனாலும் மாணவனுடைய குற்றத்துக்குப் பொறுப்பாளி அந்த ஆசிரியரே ஆவர்.

முதல் முதலில் நாம் ஏற்றுக்கொள்ளும் இத்தகைய பரிகார முறையிலும் கஷ்டமொன்றும் இருக்காது. அதனால் நான் வேறு எந்தக் காரியத்தையும் நிறுத்திவைக்கவில்லை. மேலும் நான் உபவாசகாலத்தில் பழ ஆகாரங்களை உட்கொள்பவனாக இருந்தேன் என்பதை யாரும் மறந்து விடக் கூடாது. இரண்டாவது முறையாக ஏற்றுக் கொண்ட உபவாசத்தின் பிற்பகுதியில் எனக்குச் சிறிது சிரமம் தோன்றிற்று. அப்போது நான் ராம நாமத்தின் மகிமையை அவ்வளவாக உணர்ந்திருக்க வில்லையாதலின் எனக்கு அவ்வளவு ஆத்மசக்தி யிருக்க வில்லை. மேலும், அப்போது உபவாச காலத்தில் நடந்துகொள்ளவேண்டிய முறைகளும் எனக்கு அதிகமாகத் தெரியாமலிருந்தது. எனவே, நான் முதல் ஏழு தினங்களில் உபவாசத்தை எளிதாக அனுஷ்டித்தபடியால் இரண்டாவது ஏழு தினங்களையும் அலக்ஷியமாகக் கருதினேன். நான் சிறிதே ஜலம் பருகி வந்தபடியால் என் வாய் தொண்டை வரை உலர்ந்து போய் பிசினைப்போல் ஒட்டிக்கொள்ள ஆரம்பிக்கவே, மெதுவான குரலில் பேச வேண்டியதாயிற்று. இவ்வாறிருந்தும் அவசியமானபோது நான் சொன்னதைச் சிலர் எழுதிக்கொண்டு தான் வந்தார்கள். ராமாயணம் முதலிய புண்ணிய சரித்திரங்களைப் படிப்பதைக் கேட்டு வந்தேன். அவசியமான விஷயங்களைப் பற்றி விவாதிக்கவும் எனக்குச் சக்தி இருந்தது.

---

தனக்கென வாழாப் பிறர்க்[குரியாளர்—மிக

சினக்கினும் சீற்றம்தேய்உறு[மால்.

---

# பைத்தியக்காரப் பேச்சுகள்.

அடா! இந்த மாடு தாறுமாறான சுளிகளுடன் இருக்கிறது. இது வீட்டில் நின்றால் குடும்பத்திற்கே பெரிய அபகேடு வந்து சேரும். ஆனதால் சீக்கிரத்தில் இம் மாட்டை விலை கூறி விடு. பால் எவ்வளவு கறந்தாலும் அதை யெல்லாம் யோசியாமல் விலக்கி விடு.

* *

ஐயோ பாவம்! இப் பெண் விவாகமான 10 தினங்களிலே விதவையாய் விட்டாளே யென்றார் வேணுகோபால்.

பதில்—கல்யாணத்தின் போது கைப் பிடித்துக் கொடுத்தவரின் கை விசேடம் இப் பயன் தந்திருக்கிறது.

* *

ஐயா வேதியரே! ஆற்றொணாத் துயரம் தருமாறு ஒரு பாவ நிகழ்ச்சிக்காளாகி விட்டேன். அதற்குப் பரிகாரம் தெரிகிலேன். பாவம் நீக்குவதெங்ஙனம்?

வேதி—வருத்தப்படாதே. பாவம் பறந்தோடி விட மார்க்கம் இருக்கிறது. அது என் போன்ற பிராமணருக்குக் கோதானம் கொடுப்பது. எனக்கே கொடுத்து விடு. அதற்கான கிரியையை யான் செய்து முடிக்கிறேன்.

* *

ஓய் ஐயரே! நீங்கள் மாமிசம் சாப்பிடாதவராச்சுதே; நேற்றையதினம் தின்றதாக உங்கள் பையன் சொன்னனே யென்ன?

ஐ—ஆமாம்; தின்றோம். எக்கியஞ் செய்து தின்றோமாகையால் பாவமில்லை.

* *

ஸ்ரீநிவாசன்— சேணியரே! எது இவ்வளவு பிரயாசையுடன் கடாவுக்கு இரை திணிக்கிறீர்கள். முட்டுப் பந்தயத்திற்கு தயார்ப் பண்ணுகிறீர்களோ?

சேணியர்—இல்லை இல்லை. மாரியம்மனுக்கு வெட்டுவதற்காக.

ஸ்ரீநி—உங்கள் வீட்டிலுள்ள மாரியம்மன்களுக்கா அன்றி தெய்வ மாரியம்மனுக்கா? தெய்வ மாரியம்மனுக்குப் பலி தேவை யில்லையே!

சேணி—தெய்வத்தைப் பழிக்காதே. நாசமடைந்து போவாய். வருஷமெல்லாம் வெட்டி வருவதை அம்மாள் சந்தோஷமாய் ஏற்று வருகிறாள். இப்படி எல்லாம் தெரிந்தவன் போல் பேசாதே.

* *

கேள்வி—காலையில் தாங்கள் சாப்பிடுவது என்ன?

பதில்—பழஞ் சாதந்தான்.

கேள்வி—கர் நாடகம்! பலகாரம் காப்பி சாப்பிடக் கூடாதா?

* *

பச்சைமலை—ரத்தினம்! உன் மகள் சுலோசனாவை யெங்கே?

ரத்—பள்ளிக்கூடம் போயிருக்கிறாள்.

பச்—பள்ளிக்கூடம் போய்க் கொண்டிருந்தால் பின் வேலைக்கு உதவமாட்டாள். என் மகள் ஏலம்மாள் இப்போது எவ்வளவு, சாணியானாலும் தட்டி எருவாக்கி விடுவாளே.

* *

கேள்வி—இன்று ஊருக்குப்போக வேண்டு மென்று புறப்பட்டுக் கொண்டிருந்தீரே; ஏன் போக வில்லை?

பதில்—புறப்பட்டுப் போகும்போது ஒரு பூனை குறுக்கே ஓடினதால் திரும்பி விட்டேன்.

* *

கேள்வி—கல்யாணம், கருமாதி முதலிய சுப அசுபச் சடங்குகளைப் பிராமணர்களை நீக்கி நாமே செய்து கொண்டால் என்ன?

பதில்—அது தோஷம் ஆகும். பிராமணர்கள் தான் இவற்றிற் குரியவராவர்.

* *

விவேகி—சிசுக்களை அடிக்கக் கூடாது. வார்த்தைகளினாலே அவர்களின் தவறுதலை யுணர்ப்பித்து நல் வழிக்குக் கொண்டு வரல் வேண்டும். அடிப்பது பாவம்!

பதில்—போயா போ. அடியாத மாடு பணியாது. அடிமே லடி யடித்தால் அம்மியும் நகரும்மையா! இது தெரியாமற் பேசாதீரும்.

---

# நாடார் மறவர் பகைமை.

## நாடார்கள் பக்கம் இரண்டு கொலைகள்.

### வழக்கும் முடிந்தது.

ராமநாதபுரம் அடிஷனல் செஷன்ஸ் ஜட்ஜ் மிஸ்டர் பலராம்தாஸ் அவர்கள் மேற்படி வழக்கில் 21-1-28-ல் தீர்ப்புக் கூறினர். வழக்கின் விவரம்:—ஸ்ரீவில்லிபுத்தூருக் கருகிலுள்ள பாட்டக்குளம் என்ற கிராமத்திலுள்ள மறவர்களுக்கும் நாடார்களுக்கும் வெகு காலமாய் கக்ஷிப் பகையிருந்து வந்தது. அவ்வூர் நாடார்களில் பெரும்பான்மையோர் ரோமன் காதலிக் வகுப்பைத் தழுவியவர்களானதினால் அவர்கள் நாடார் மறவர் தெருவில் ஓர் காலி இடத்தை விலைக்கு வாங்கி அந்த விடத்தில் ரோமன் காதலிக் பையன்களுக்கு ஓர் பள்ளிக்கூடத்தைக்கட்டும்படி அம் மதத்தின் தலைவரிடம் ஒப்புவித்தார்கள். மறவர்கள் மேற்படி பள்ளிக்கூடம் கட்டக் கூடாதெனத் தடுத்தார்கள். ரோமன் காதலிக் பாதிரியார் சிவில் கோர்ட்டில் தாம் பள்ளிக்கூடம் கட்டுவதை மறவர்கள் தடுக்கக்கூடாதென்று ஓர் இஞ்ஜங்ஷன் உத்தரவைப் பெற்றார் அந்த இஞ்ஜங்ஷன் உத்தரவைப் பெற்று ரோமன் காதலிக் சர்ச் மானேஜர் மேற்படி கட்டடத்தைக் கட்ட பாட்டக் குளத்திற்குப் போன பொழுது அவ்வூர் மறவர்கள் அவரை நையப் புடைத்து கட்டடம் கட்டவொட்டாமல் தடுத்தார்கள். சர்ச் மானேஜர் இதன்மேல் மறவர்களின் பேரில் ஓர் கிரிமினல் வழக்குத் தொடர்ந்து அவ்வழக்கு 29-6-27-ல் வாயிதாப் போடப்பட்டிருந்தது. சர்ச் மானேஜரின் சாக்ஷிகளாய் ஸ்ரீமான் பிச்சிக்குட்டி நாடார் ஸ்ரீமான் முத்தப்ப நாடார் ஆகியவிருவரும் போடப்பட்டிருந்தனர். இதைத்தெரிந்த மறவர்கள், தங்களுக்கு விரோதமாய் அவ்வழக்கில் பிச்சிக்குட்டி நாடார், முத்தப்ப நாடார் சாக்ஷியம் சொன்னால் அவர்களைத் தொலைத்து விடுவதாய் பயமுறுத்தினராம். சென்ற ஜூன் மீ 24, 26-ந் தேதிகளில் முத்தப்பநாடார் பிச்சிக்குட்டி நாடார் இவர்களது கிணறுகளை மறவர்கள் நாசமாக்கினார்களாம். சென்ற ஜூன் 27-ம் தேதி இன்னாசி நாடார், முத்தப்பநாடார், பிச்சிக்குட்டி நாடார் மூவரும் பாட்டக்குளத்திலிருந்து ஸ்ரீ வில்லிபுத்தூருக்குச் சென்று கொண்டிருக்கையில், பட்டப் பகலில் பல மறவர்கள், வேல் கம்பு, குத்துக்கம்புகளுடன் ஆயுதபாணிகளாய் வழியில் மூவரையும் சூழ்ந்து கொண்டு, இன்னாசிநாடார் முத்தப்ப நாடார் இவர்களுக்குப் பலத்த காயமுண்டாக்கி பிச்சிக்குட்டிநாடாரை ஓடஓட அடித்தார்களாம். காயத்தினால் இன்னாசி நாடாரும் முத்தப்பநாடாரும் மாண்டார்கள்; தப்பி ஓடிய பிச்சிக்குட்டிநாடார் கிராம முனிசீபிடம் இச்செய்தியைத் தெரிவித்தார். குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட பதினைந்து பேர்களில் இ. பி. கோ. 147, 448, 169, 302, 323-வது பிரிவுகளின்படி பதினொரு பேர்களே செஷனுக்கு கமிட்டி செய்யப்பட்டனர். கனம் ஜட்ஜ் அவர்கள் இ. பி. கோ. 302, 449 பிரிவுகளின்படி எதிரிகளை விடுதலை செய்து 1-முதல் 4-வரையும் 8 முதல் 10 வரை எதிரிகளை 147—வது பிரிவின்படி மூன்று வருட கடுங்காவல் தண்டனை விதித்து 11-வது எதிரிக்கு 200 ரூ அபாரதமும் 5-முதல் 7 வரை எதிரிகளுக்கு 148வது பிரிவின்படி 5-மாதக் கடுங் காவலும் 1 முதல் 3 வரை எதிரிகளுக்கு 323-வது பிரிவின்படி 3 மாதக் கடுங்காவலும் 6, 7, எதிரிகளுக்கு 4 மாதக் கடுங்காவல் தண்டனையும் விதித்தார். எதிரிகளுக்கு மிஸ்டர் கே. பி. கோபால மேனனும் (பாரட் லா) பிராசிக்யூஷனுக்கு மிஸ்டர் அப்பாசாலிகானும் ஆஜரானார்கள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## அருப்புக்கோட்டை.

### சுகாதார வாரமும், பார்ப்பன ஹெல்த் இன்ஸ்பெக்டரும்.

இந்நகரில் சில மாதங்களாய் மும்முரமாக நடைபெற்று வரும் சுயமரியாதை இயக்கத்தைக் கண்டு சில பார்ப்பனரும் அவர்களைத் தெய்வமாகக் கருதி நடக்கும் சில பார்ப்பனரல்லாதாரும் எவ்விதத்திலும் இவ்வியக்கத்தை யடக்கி விட வேண்டுமெனக் கங்கணங் கட்டி முன் வந்து வேலை செய்து வருகிறார்கள். இதற்கனுகுணமாக சுகாதார வாரக் கொண்டாட்டம் வந்து சேர்ந்தது. அதாவது, பிப்ரவரி மீ முதல் வாரத்தில் வழக்கம்போல நடைபெறும் தேசிய சுகாதார வாரக் கொண்டாட்டத்தை இவ்வூர் கனம். ஹெல்த் இன்ஸ்பெக்டரும், வக்கீல் ஸ்ரீமான் அனந்தநாராயண சாஸ்திரிகளும் பார்ப்பனப் பிரசாரத்திற்கு உபயோகப்படுத்திக் கொண்டார்கள். அதன் விபரம் பின் வருமாறு:—

4—2—28 மாலை 5 மணிக்கு சொக்கலிங்கபுரம் கல் மடத்திற்கு முன்னும் சுகாதார வாரக் கூட்டம் ஒன்று நடைபெறுமெனப் பறை யடித்து விட்டு இரவு 7½ மணிக்கு கனம். ஹெல்த் இன்ஸ்பெக்டர், அவருடைய பியூன், ஸ்ரீமான்கள் வக்கீல் அனந்தநாராயண சாஸ்திரி, நாடார் ஹைஸ்கூல் கணக்கு உபாத்தியாயர் நாராயண அய்யர் பி. ஏ. எல். டி., ஷை ஸ்கூல் டிரில் மாஸ்டர் ஸ்ரீநிவாச அய்யர், இராமயாணப் பிரசங்கி பாகவதமணி சாஸ்திரி ஆகியவர்களும், இன்னும் சில பிராமணர்களுமாக தேவாங்கர் பிள்ளையார் கோவில் மடத்தில் கூட்டம் கூட்டினார்கள். அது சமயத்தில் தேவாங்கர் ஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீமான் தேவராஜு, ஸ்ரீமான் வீர. சு. பு. வீரையா செட்டியார், ஸ்ரீமான் க. மீ. சோமசுந்தரம் செட்டியார் முதலிய பிராமணரல்லாதார் அங்கு விஜயம் செய்திருந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். ஸ்ரீமான் வீரையா செட்டியாரவர்களே ஸ்ரீமான் க. மீ. சோமசுந்தரம் செட்டியாரை அத்தக் கூட்டத்திற்கு வரும்படி வற்புறுத்தி கடையிலிருந்து அழைத்துக் கொண்டு போனதாகத் தெரிகிறது. அல்லாமலும், கூட்டம் கூடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் ஷை வீரையா செட்டியாரவர்களே செய்தார்கள். ஆரம்பத்தில் கூட்டம் மிகச் சொற்பமா யிருந்ததால் கூட்டம் சேர்ப்பதற்காக தேவாரம், திருவாசகம் பயின்ற தம் கடையிலுள்ள கருப்பையா என்னும் பையனைப் பாடும்படி ஷை வீரையாசெட்டியாரவர்கள் சொல்லவே பையன் எழுந்து நின்றான்.

அவ்வமயம் ஸ்ரீமான் வக்கீல் சாஸ்திரிகள் சூத்திரன் பாடக் கூடாதென்றும், பிராமணனே பாட வேண்டுமெனவுஞ் சொல்லி ஸ்ரீமான் பாகவதமணி சாஸ்திரிகளைப் பாடச் செய்தார். அத்துடனில்லாமல் பிராமண மேன்மையைப் பற்றியும் பேச ஆரம்பித்து விட்டார்.

இவ் வித்தியாசம் பாராட்டியதால் மனம் உடைந்த ஸ்ரீமான்கள் க. மீ. சோமசுந்தரம் செட்டியாரும், வீரையா செட்டியாரும் சுகாதாரக் கூட்டத்தில் சுகாதாரத்தைப் பற்றி பேச வேண்டுமேயல்லாமல் பிராமணீயத்தைப் பற்றி பேசுதல் கூடாது என எடுத்துக் கூறினார்கள். அதை அலட்சியம் செய்து மேலும் மேலும் சாஸ்திரிகள் தம்முள்ளத் துள்ளதையே பேசினார்கள். கனம். ஹெல்த் இன்ஸ்பெக்டர் சாஸ்திரிகளை ஒன்றும் சொல்லாது விடுத்து ஆக்ஷேபித்தவர்களையே அடக்க ஆரம்பித்தார். பிராமணரல்லாதார்கள் மனம் நொந்து உடனே கலைந்து போய் விட்டனர். கனம். ஹெல்த் இன்ஸ்பெக்டரும், அவர் தம் பார்ப்பன சகாக்களும் தம் எண்ணம் நிறைவேறாதது கண்டு, கொண்டு வந்த துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து விட்டு ஆட்சேபித்தவர்களை வர்மித்துக் கொண்டு புறப்பட்டார்கள். அது சமயம் [illegible] க குல [illegible] சபை [illegible]

கொண்டு போக அனுமதி கொடுத்த ஸ்ரீமான் சா. கருப்பையா என்பவர் பெஞ்சு, நாற்காலிகளைத் திரும்பச் சேர்த்து விட்டுப் போக வேண்டிய முறையை கனம். ஹெல்த் இன்ஸ்பெக்டரிடம் அறிவித்தார். உடனே கனம். ஹெல்த் இன்ஸ்பெக்டர் "என்னை ஒரு உத்தியோகஸ்தர் என்று மதியாது இவ்வளவு தூரம் பேச வந்த உன்னைப் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொல்லி விட்டு பெஞ்சுகளையும் நாற்காலிகளையும் திரும்பச் சேர்க்காது போய் விட்டார்.

பின்னர் இரவு 10 மணிக்கு கனம். சப் இன்ஸ்பெக்டர் சில கான்ஸ்டேபிள்களுடனும், ஹெல்த் ஆபீசர் பியூனுடனும் ஸ்ரீமான் க. மீ. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள் கடைக்கு வந்து அவரையும், ஸ்ரீமான் சா. கருப்பய்யா அவர்களையும் அரஸ்ட் செய்திருப்பதாய்ச் சொல்லி அவ் விருவரையும், மடத்தில் தூங்கிக் கொண்டிருந்த மற்றொரு பையனையும் பிடித்துக் கொண்டு போய் பந்தோபஸ்தில் வைத்திருந்து மறு நாள் காலை ஜாமீனில் விட்டிருக்கிறார். இன்னும் சிலரையும் ரிப்போர்ட்டில் சேர்த்திருப்பதாகச் சொல்லிக் கையெழுத்து வாங்கி ஜாமீனில் விட்டிருக்கிறார். மேல் நடபடிக்கை ஒன்றும் தெரிய வில்லை.

என்னே காலத்தின் கோலம்! தேசிய சுகாதார வாரத்தில் சிசு சம்ரக்ஷணம் எவ்வாறெனவும், காலரா, பிளேக், மலேரியா என்னும் விஷயங்களையும், அவற்றைத் தடுக்கும் முறைகளையும் பேசுவது வழக்கம். இத்தகைய கூட்டங்களில் ஸ்ரீமான் க. மீ. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள் முன்னின்று நடத்தி வைத்திருக்கிறாரென்பது பிரசித்தம். அப்படி இருக்க புதிதாக வந்த ஹெல்த் இன்பெக்டர் செய்த செய்கை ஜனங்களின் மனதைப் புண்ணாக்கி கொதிப்படையச் செய்திருக்கிறது. இவர் செய்த சூட்சி கடவுளுக்கும் தெரியாமல் போய் விடாது. இருப்பினும் சுயமரியாதை வீரர்களே! இப்படிப் பட்ட அநியாயங்களைக் கண்டு பயந்து பின் வாங்கி விடக் கூடாது. எழுமின்! விழிமின்!! சுயமரியாதை அடைமின்!!! என ஒரு நிருபர் [illegible]

## ஐயனார் கோவில் லாட்டரிச் சீட்டு.

மதுரை, சிவகாசி, விருதுநகர், அருப்புக்கோட்டை, திருமங்கலம், கமுதி, பாளையம்பட்டி, மார்த்தாண்டன்பட்டி முதலிய இடங்களிலும், இன்னும் அநேக கிராமங்களிலும் உள்ள அநேகர்களுக்கு குல தெய்வமாக இருக்கின்ற திருச்செந்தூர் தாலுகா மேலப்புதுக்குடி சுனையினருகிலுள்ள அருஞ்சுனை காத்த ஐயனார் கோவிலில் வருஷமொருதடவை பங்குனி உத்திரம் முடிய பத்துத் திருவிழாக்கள் நடைபெற்று வருவது யாவருமறிந்த விஷயமே. ஷை உற்சவ க்ஷேம நிதிக்காகப் பெரியோர்களால் லாட்டரிச்சீட்டு ஒன்று ஏற்படுத்தி சீட்டு 1-க்கு ரூபாய் 1-வீதம் 5000 சீட்டுகள் சேகரித்து, அதில் ரூ 2500 பிரைஸ்களாக வரும் விபவ ஹூ வைகாசி மீ 11 உ (24-5-28)யில் ஷை அருஞ்சுனைகாத்த ஐயனார் கோவிலின் முன்பாக இப்பக்கங்களிலுள்ளபெரியோர்களைக்கொண்டு எடுத்து, மீத ரூபாயை விற்பனை கமிஷனும், செலவும் போக தர்மப்பண்டுடன் சேர்ப்பதாக தீர்மானிக்கப்பெற்று அதன்படி சீட்டு புஸ்தகங்கள் தயாராகி வருகின்றன. தயாரானவுடன் சீட்டு விற்பனைக்கு பிரசாரகர்கள் எல்லா வூர்களுக்கும் வருவார்கள். அவர்களுக்கு ஆங்காங்குள்ள சகல கனவான்களும் சீட்டு விற்பனையில் தங்களாலியன்ற உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். ஏதாவது விஷயமறிய விரும்புவோர் அ. துரைசாமிநாடார், மேலப் புதுக்குடி, அம்மன்புரம் போஸ்ட்டு, திருநெல்வேலி ஜில்லா என்ற விலாசத்திற்கு ரிப்ளைக்கார்டு எழுதித் தெரிந்து கொள்ளலாம் என்று ஷை சீட்டுப் பிராசா சங்கத்தார் எழுதுகிறார்கள்.

## இன்பத்திரள்.

ஞாபக சக்தி மலிந்துள்ளவர்களே கெட்டிக்காரர்களெனும் பெயருக்குப் பங்காளிகளா யிருக்கிறார்கள்.

* *

பொருளழகும், வார்த்தை யழகு மிருந்தாலும் எழுத்தழகு மவசியமே. இதற்கு அழகெழுத்துடையோர்களின் எழுத்தைப் பார்த்துஅதைப்போ லெழுதிப் பழகுதலே வழி.

* *

ஒருவர் மேலொன்றை நிச்சயமாய்ச் சந்தேகப் பட்டாலும் பூரணமான பல ஆதாரங்களின்றி அவரிடங் கேட்குதல் சிறப்பல்ல. ஒரு வேளை நாம் நிச்சயத்தது இல்லாதிருந்தாலு மிருக்கலாம். ஆகாயத்தில் மிகப் பெரிதாகத் தோன்றிய வான வில்லும் இருந்த விடம் தெரியாமல் மறைந்து விடுகிறது.

* *

ஆங்கிலேயர்களுக்கு நாம் அடிமையாயிருக்க வேண்டிய தில்லாததுபோலவே பிராமணர்களெனச் சொல்லிக் கொள்வோர்களுக்கும் நம்மைக் காட்டிலும் அதிக சுதந்திரமோ அல்லது நமது செல்வத்தினும் பெரிதாகிய சுயமரியாதையைப் பறி கொடுக்கவோ வேண்டிய தில்லை. ஆடவர்களுக்கு ஆடவன் அடிமையா யிருக்க வேண்டுமெனும் கட்டாயமுங் கிடையாது. பெற்றோர்களுக்குப் பிள்ளைகள் அன்பா யிருக்க வேண்டுமே தவிர அடிமையா யிருக்க வேண்டிய அவசிய மில்லை.

* *

சுயமரியாதை சுயராஜ்ய பாதை. நல் வழியே தோழன். தோழனே ஜெயம். ஜெயமே சுகம். சுகமே இன்பம். இன்பமே ஆனந்தம். ஆனந்தமே ஆனந்தன்—கடவுள்.

* *

விருக்ஷத்தில் கனி தானாகவே பழுக்கிறது. இயற்கையாக, நிர்வித அன்பு உணர்ச்சியால் மனம் ஒற்றுமைப் பட்டு இன்ப மடைதலே காதல். சதிபதிகளே மரம்; தானாகப் பழுக்கும் பழமே காதல்.

* *

மனிதனுடைய சொல்லிலும், செயலிலு மிருந்தே கௌரவமும், அவமரியாதையும் பிறக்கிறது.

* *

சிலர் தாங்கள் கெட்டிக்காரர்களென்று சாமர்த்தியப் பேச்சுப் பேசும் போது கேட்போரிற் சிலர் அவர்களை பைத்தியகாரரெனக் கொள்கிறார்கள்.

* *

ஒவ்வொருவரும் தங்கள் தின வேலைகளைப் பெருங் கஷ்ட பாரமாகக் கருதிச் செய்யாது சந்தோஷத்தை அனுபவிக்கும் நேரமாக அவைகளைப் பிரியமாக மகிழுடன் நடத்துதலே வாழ்க்கையின் மர்மம்.

* *

கள்ளத்தனம் செய்தவர்களுக்குள் சச்சரவுகளுண்டாகி விட்டால் கள்ளத்தனம் செய்யப்பட்டவர்களுக் கேற்பட்ட நஷ்டம் லாபமாக மாறி விடும்.

* *

கல்வியினால் மிக மிகச் சிறியவளவே பொறுமை உண்டாகிறது. ஆனால் அனுபவத்தினாலோ பன் மடங்கு மிக விரைவாக சகிக்குந் தன்மை வளர்கிறது.

* *

பல் வேறு விஷயங்களைக் கேள்ப்பதால் அறிவு அதிகப்படுகிற தென்பதை மறுக்க வியலாது. ஆனால் நல் விஷயங்களைக் கேட்பதால் சன்மார்க்கத்தில் பாத்தியமும், தீய விஷயங்களைச் செவியுறுவதால் துன் னெறியில் பங்குமே சித்திக்கும்.

* *

ஏழைகள் இன்றேல் முதலாளிகளில்லை. ஏழைகளே சீமான்களுக்கு உணவு அளிக்கிறார்கள்.

அ. கு. அண்ணாமலை.

வழியில் சந்தித்துப் பிரிவதிலிருக்கும் அன்பு [illegible]

## விருது நகர்.

இவ்வூர் நகர பரிபாலன சபையார், ரயில்வே பீடர்ரோடும், மதுரை ரோடும் சந்திக்குமிடத்தில் அமைக்கவிருக்கும் "கோஷன் சவுக்க"த்திற்கு சுகாதார, கவால்இலாகாமந்திரியும், சென்னை சட்டசபை மெம்பரும், திவான்பகதூருமான மகா-ள-ள-ஸ்ரீ ஆர். என். ஆரோக்கிய சுவாமி முதலியார் பி. ஏ. பி. வி. இ. அவர்கள் 5-2-28-ல் காலை 7-45—க்கு அஸ்திவாரக்கல் நாட்டி சிறப்பித்தார்கள். இவ்வைபவம் முடிவெய்தியதும், முனிஸிபல் ஆபீஸ் "ராஜாபில்டிங்"கில் முனிஸிபல் சேர்மன் ஸ்ரீமான் முகமது இப்ராஹிம் ராவுத்தரவர்களும், வைஸ் சேர்மன் ஸ்ரீமான் மு. அ. பழனிச்சாமிநாடாரவர்களும் கனம். மந்திரியவர்களுக்கு காலை விருந்தளித்து மகிழ்ந்தனர். அதன் பின்னர், முனிஸிபல் ஆபீஸ் சார்பில் கனம். மந்திரியவர்களுக்கு உபசாரப்பத்திரம் வாசித்தளிக்கப்பெற்றது.

இவ்வூர் "க்ஷத்திரியப் பெண்பாடசாலை"யின் 13-வது வருடப் பூர்த்திக்கொண்டாட்டம், பாளையங்கோட்டை "சாராடக்கர் பெண்கள் காலேஜ்" தலைமை உபாத்தினி மிஸ். ஜாய் ஸாலமன் பி. ஏ. எல். டி. அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் 4-2-28-ல் மாலை 4-30 மணிக்கு ஆரம்பமாகி மங்களகரமாய் முடிவுற்றது.

## மாட்டுத்தாவணி அழைப்பு.

நிலக்கோட்டையில் நாளது பிரபவ ஹூ பங்குனி மீ 20 உ முதல் 26 உ வரை நாடார்களால் ஸ்ரீ மாரியம்மன் உற்சவம் வெகு விமரிசையாய் நடைபெறும். அது சமயம் மாட்டு வியாபாரத்துக்கு மிகப் பெருமை வாய்ந்துள்ள இந்நகரில் மாட்டுக்கடைகள் வெகு விசேஷமாய் நடைபெறும். ஏராளமான மாடுகள் வருமென எதிர்பார்க்கப்படுகிறது. மாடுகள் வாங்கவும் விற்கவும் வரும் வியாபாரிகளுக்கு ஷைதேவஸ்தான காரியஸ்தர்களால் அநேக சௌகரியங்கள் செய்துகொடுக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ஆகையால் ஆங்காங்குள்ள மாட்டுவியாபாரிகள் ஷை உற்சவத்தின்போது இந்நகர்க்கு வந்து சௌகரியமாய்த் தங்கி தக்க லாபம் அடைந்துபோகுமாறு அழைக்கின்றோம் என ஸ்ரீமான் எஸ். வி. என். செட்டியார் எழுதுகிறார்.

## பின்னும் காலண்டர்களின் வரவு.

30–1–28–ல் வெளியான மித்திரனில் நம் மித்திரன் காரியாலயத்திற்கு காலண்டர்கள் வரவு குறித்து எழுதியதின் பின்னர் இது வரையில் முக்கூடல் பீடி வியாபாரம் ஸ்ரீமான் டி. சின்னையா நாடாரவர்களிடமிருந்தும், மதுரை ஸ்ரீமான் பா. ம. பாண்டியநாடாரவர்களிடமிருந்தும், கொளும்பு சித்திரசாலையிலிருந்தும் கிடைக்கப் பெற்று எமது வந்தனத்தைச் செலுத்துகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## ஓர் திருத்தம்.

சென்றவாரம் வெளியீடான மித்திரனின் 6 வது பக்கத்தில் மதிப்புரைகள் எனும் தலைப்பின் கீழுள்ள "ஜஸ்டிஸ்" வருஷ அனுபந்தம் என்ற விஷயத்தின் 20—வது வரி முதலில் பிராமணரல்லார்கக்ஷி ஸ்தாபகர்களான உயர். திருவாளர்கள் டாக்டர். டி. எம் நாயர், ஸர். பி. தியாகராய செட்டியார் ஆகியவர்களின் கம்பீர நுபாலங்காரத் தோற்றப்படமும் என்று சேர்த்துக் கொள்ள வேண்டுகின்றனம்.

சுயமரியாதை நற் சுகுண மார்
[பாலனை
நய வஞ்சக்காரர்கள் நசுக்கிடப்
[பார்ப்பார்
பய மேது மின்றியப் பாலனைக்
[illegible]
[illegible] சிலராய சலியங்
[illegible]

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம
மேது மீன்றி யெப்பொருட்கு மெவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்
சோதியை மாத்தூ வெளியைமனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்
தீதில் பரமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

நாடார்குல மித்திரன்

பிரபவ ௵ மாசி ௴ ௧௨

## சூத்திரன் பாடக் கூடாதாம்!

அருப்புக் கோட்டையைச் சேர்ந்த சொக்கலிங்கபுரம் தேவாங்கப் பொது மண்டபத்துக்குமுன் ஏற்கனவே தமுக்கு விளம்பரம் செய்த பிரகாரம் சுகாதார வாரக் கொண்டாட்டத்தைப் பற்றிய பிரசங்கம் நடத்தப்பட்ட விபரமும், அதனால் விளைந்த சம்பவங்களையும் மற்றொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம்.

அக் கூட்டத்தில் தலைமை வகித்த திரு. சாஸ்திரியார் ஆரம்பத்தில் கடவுள் வணக்கம் சொல்ல ஆள் தேடியபோது கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த திரு. செட்டியார் தம் கடையிலுள்ள பையனைப் பாடும்படி சொன்ன பிறகு சூத்திரன் பாடக் கூடாதென்று ஆட்சேபித்தார். ஜனங்கள் சுகாதாரப் பிரசாரத்தில் பிராமணீயப் பிரசாரம் தேவை இல்லை என்று ஆட்சேபித்துக் கலைந்து போய் விட்டார்கள். கூட்டம் கலைந்த பிறகு தங்கள் பிரசங்கத்தைக் கேட்க ஆளில்லாமற் போனது தங்களுக்கவமானமாய் விட்டதாகக் கருதி சுகாதார அதிகாரிகள் கொடுத்த பிராதின் பேரில் சிலரை அரஸ்ட் செய்து ஜாமீனில் விட்டிருப்பதாகத் தெரிகிறது. இதனால் நகரத்தில் மிகுந்த பரபரப் பேற்பட்டிருக்கிறது. வழக்கின் முடிவை ஜனங்கள் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கின்றார்கள். வழக்கைப் பற்றி நாமிப்போது ஒன்றும் சொல்ல வரவில்லை.

சுகாதாரப் பிரசங்கத்தில் சூத்திரன் பாடக் கூடாதென்று பிராமணீயப் பிரசாரம் செய்யலாமா? சுகாதாரத்தைப் பற்றித் தாங்கள் ஜனங்களுக்குப் போதிக்கும்படி கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர்கள் வீண் குழப்பம் செய்வார்களா? குழப்பத்திற்குக் காரணம் சூத்திரப் பிரசினையல்லவா? நடை பெறும் சம்பவத்திற்குப் புறம்பான விஷயங்களைப் பொதுக் கூட்டத்தில் ஆட்சேபிக்க ஜனங்களுக்கு உரிமை இல்லையா? தலைவராயுள்ளவர் தவறுதலைத் திருத்திக் கொண்டு ஜனங்களை சாந்தப் படுத்தி பக்குவமாய்ப் புத்தி போதிப்பதை விட்டு பிராமணன், சூத்திரன் என்று வேற்றுமை காட்டுவது யோக்கியமாகுமா? இதென்ன பிரிட்டிஷ் ராஜ்யமா பிராமண ராஜ்யமா? பிராமணப் பிரசாரத்துக்கு வருணாச்சிரம மகா மண்டபங்கள் தான் பொருந்துமே யன்றி சுகாதாரப் பொதுக் கூட்டங்கள் பொருந்துமா? அவ் வற்ப விஷயத்தைப் பிரமாதமாக்கி, அர்த்த ராத்திரி வேளையில் அகப்பட்டவர்களையெல்லாம் அரஸ்ட் செய்திருப்பது மிகுந்த ஆச்சரியமாயும், அநியாயமாகவு மிருக்கிறது.

இந் நகரத்தில் இதுவரையும் பிராமணர், பிராமணரல்லாதார் என்ற பாகுபாடு இருந்த தில்லை. திரு. சாஸ்திரியாரும், சுகாதார அதிகாரியும் வேற்றுமைக்கு விதை போட்டு விட்டார்கள். சுயமரியாதைப் போராட்டம் கூடிய சீக்கிரம் உண்டாகக் கூடும். திரு. சாஸ்திரியார் வெகு நாளாக இவ்வூரில் வக்கீல் வேலை பார்ப்பவர். பொய் பேசுவதில்லை. பொய்க் கேசுகளுக்கு வக்கலாத்தும் வாங்குவதில்லை. மிகுந்த புத்திமான். மகா பக்திமான். வர்ணாச்சிரம தர்மத்தில் மிகவும் நம்பிக்கையுடையவர் என்றும் பேர்பெற்றவர். சாதாரணமாய் சர்வ ஜனங்களாலும் மரியாதை செய்யப் பெற்றவருமாவர். இவர் தான் இவ் வழக்கிற்கு முதற் சாட்சியாகவு மிருக்க வேண்டும். இவர் தலைமைவகித்த போது கடவுள் வணக்கத்திற்குப் பாட ஆள் தேடியதும், திரு. வீரையா செட்டியார் கூட்டத்திலிருந்த தம் கடையில் வேலை பார்க்கும் பாடும் திறமையுள்ள கருப்பையா வென்னும் பையனைப் பாடும்படி சொல்ல பையன் பாடப் பிரயத்தனப் படும் போது தாம் சூத்திரன் பாடக் கூடாதென்று தடுத்து தம் அருகிலிருந்த ஒரு பாகவதப் பிராமணரைப் பாடச் சொல்லியதையும், பிராமணன், சூத்திரன் என்ற வித்தியாசப் பிரசாரம் இந்த இடத்துக்குத் தேவையில்லை என்று இரண்டொருவர் ஒழுங்காய்ச் சொல்லி வரும்போது பாடிய பாகவதப்பிராமணர் பாடலை நிறுத்தித்திகைக்கஅவரைப்பார்த்து "Go on," "Go on" என்று ஆக்ரோசத்துடன் சொல்லியதையும், அதன் பிறகு கூட்டம் கலைந்து போன விதத்தையும் மறைக்காமல் உண்மையைச் சொல்லுவாரா? ஜனங்கள் மிகுந்த கவனத்துடன் சாஸ்திரியார் சாட்சியங் கூறப் போவதை எதிர் பார்க்கின்றார்கள்.

வேலியே பயிரைத் தின்னுவது போல் ஜனோபகாரத்துக்காக ஏற்பட்டிருக்கிற அதிகாரிகளிற் சிலர் ஜாதிக் கொர்வத்தினாலும், வகுப்புத் துவேஷத்தினாலும் விபரீதத்தையுண்டாக்கி விடுவது நம் நாட்டில் சகசமாயிருக்கிறது. இதை ஜனங்கள் மேலதிகாரிகளிடம் முறையிட்டாலும் பிரயோசனப் படாமற் போகிறது. இதனாலே பெரும்பாலும் நாட்டில் அமைதிக் குறைவு ஏற்படுகிறது. இதைக் கவர்ன்மெண்டார் நன்கு கவனிக்க வேண்டும்.

இராமநாதபுரம் ஜில்லாவில் சுயமரியாதை எழுச்சி அதிகமாயில்லை. இதன் மூலம் ஒரு பலமான எழுச்சி ஏற்படுமென்று தெரிய வருகிறது. துன்பத்திலிருந்து இன்பம் பிறப்பது போல் பிரஸ்தாபக் கஷ்டமான விஷயத்திலிருந்து மக்கள் மனதில் "நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்" என்ற ஆண்மையும், சுயமரியாதையும் உண்டாகட்டும்.

---

பார்ப்பானை ஐய ரென்ற
காலமும் போச்சே—வெள்ளைப்
பறங்கியைத் துரை யென்ற
காலமும் போச்சே—பிச்சை
ஏற்பாரைப் பணிகின்ற
காலமும் போச்சே—நம்மை
ஏய்ப்போருக் கேவல் செய்யும்
காலமும் போச்சே.

---

எங்கும் சுதந்திரம்
என்பதே பேச்சு—நாம்
எல்லோரும் சம மென்ப
துறுதி யாச்சு
சங்கு கொண்டே வெற்றி
யூதுவோமே—இதைத்
தரணிக் கெல்லா மெடுத்
தோதுவோ மே.

பாரதியார்.

---

# குறிப்புகள்.

### காலிகள் யார்?

ராயல் கமிஷன் பகிஷ்கார தினத்தன்று தேசத்தில் பல விடங்களிலும் கலகங்கள் நடந்திருக்கின்றன. கொள்ளையும் நடந்திருக்கிறது. இவ்வாறு நடக்குமென்பது இதற்கு முன்னடந்த சம்பவங்களால் எல்லோரும் அறிந்திருக்கக்கூடும். ஏற்கனவே சில தேசியப் பத்திரிகைகள் இவ்வாறெல்லாம் நடக்கு மென்று சோசியம் கூறிக்கொண்டிருந்தன. சொன்னது போல் நடந்து விட்டது. செத்த பிணத்தில் வாய்க்கரிசி தோண்டும் ஆசாமிகள் தங்களுக்குச் சாதகமான காலம்வரும்போது இரக்கமின்றி தங்கள் தொழிலை நடத்துவது சகசமாயிருக்கிறது. தீப்பிடித்த கிரகங்களிலுங் கூட தீயணைப் பவர்கள் போய் உள்ளே நுழைந்து கொள்ளையடிக்கின்றார்கள். இவ்வாறு செய்யும்படி தூண்டும் பேர்வழிகளுமுண்டு. இதை யெல்லாம் பார்த்துத்தான் மகாத்மாகாந்தி தேசம் சட்ட மறுப்புக்கு லாயக்கில்லை என்று கைவிட்டார். இவைகளெல்லாவற்றையும் காங்கிரஸ்த் தலைவர்கள் அனுபோகத்திலறிந்திருந்தும் சட்டசபையைத் தாங்கள் பகிஷ்கரிக்க முடியாத நிலைமையிலிருந்துகொண்டு சாதாரண ஜனங்களை சைமன் கமிஷனை பகிஷ்கரிக்க வேண்டித் தூண்டிவிடலாமா? சைமன் கமிஷனுக்கு அறிவுறுத்த வேண்டுமானால் நீதிமன்றங்கள், நிர்வாக நிலையங்கள், சட்டசபைகள் மற்றும் பல கவர்ன்மெண்டிலாக்காக்களில் மாதம் ஒன்றுக்கு 50ரூபாய் முதல் 5000ரூபாய் வரையிலும் சம்பளம் வாங்கித் தின்னும் ஆசாமிகளும், வக்கீல்களும் ஒரு வாரமாவது கண்ணை மூடி விடுவார்களானால் கமிஷன் செல்லுமிடந் தோறும் இருள் மூடி திசைதப்பி இந்தியரைத் துணைக்கழைத்துக் கொள்வார்கள். அதை விட்டு எங்கள் பெண்டு பிள்ளைகளெல்லாம் திண்டு தலையணை வைத்துச் சுகமாய் வசிப்பதை விடமாட்டோம்; உங்கள் பெண்டுபிள்ளைகளே மாடுபோல் உழைக்கப் பிறந்தவர்களென்பதுபோல் பணக்காரர்களும் படித்தவர்களும் அவரவர் வேலைகளைச் செய்துகொண்டிருக்க ஏழை மக்களை வேலைகளை விட்டு விளையாடத் தூண்டிவிட்டால் வினையாக ஏன் முடியாதென்று கேட்கின்றோம். கலகத்துக்குத் தூண்டி விட்டு பின்னர் அவர்களை காலிகளென்று கூறுவது யோக்கியமாகுமா? கலகத்துக்குத் தூண்டியவர்கள் காலிகளா கலகம் செய்தவர்கள் காலிகளா வென்பது கண்டுபிடிக்க வேண்டும்.

## பகிஷ்காரமா பலாத்கார அடக்கு முறையா?

ராயல் கமிஷன் பகிஷ்காரமென்று பேர்வைத்துக்கொண்டு காங்கிரஸ் காரர்கள் பொது ஜனங்களை அடக்கியாள வேண்டுமென்று தீர்மானித்து விட்டதாய்த் தெரிகிறது. சென்னையில் நடந்த ஹர்த்தாலில் காலிகள் கலகஞ் செய்து விட்டதாய் காங்கிரஸ் தலைவர்கள் சொல்லுவதுமல்லாமல் பகிஷ்காரத்துக்கு எதிரிடையாயிருந்தவர்களே கலகத்தைத் தூண்டிவிட்டவர்களென்று ஜாடையாய்ச் சொல்லுகிறதோடு போலீஸ் கமிஷனர் பேரிலேயும் குற்றஞ் சாட்ட ஆரம்பித்து விட்டார்கள். திரு. சத்தியமூர்த்தியும், டாக்டர். வரதராஜுலுவும் இவ்விதம் குற்றஞ்சாட்டுபவர்களில் முக்கியஸ்தர்கள்.

முக்கியமாய் பொது மக்கள் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால், பகிஷ்காரஞ் செய்யக்கூடாதென்றவர்கள் கலகஞ் செய்வதற்குக் காரணமுண்டா வென்பதே முக்கியம். கடைகள் கொள்ளையடிக்கப் பட்டதைப் பற்றி முதலில் கவனிப்போம். கடைகள் திறந்திருந்தவர்கள் ஹர்த்தால் செய்வதற்கு உடன் படாதவர்களென்பதை சந்தேகிக்கவேண்டியதில்லை. ஹர்த்தாலில் நம்பிக்கையிருந்தால் கடை திறந்திருக்கமாட்டார்களல்லவா? அவர்கள் கடையைக் கொள்ளையடிப்பவர்கள் அவர்களின் எதிர்க் கக்ஷியாராயிருக்க வேண்டுமன்றி அவர்களின் சகாக்களே செய்தார்களென்று நம்பமுடியுமா? ஹர்த்தால் செய்ய விரும்புவோர்கள் பொறுப்புடையவர்களாயிருந்தால் தாங்களே முன்னின்று நடத்துவார்கள். அவர்களுக்கு உண்மையான தேசபக்தியிருந்தாலல்லவா பொறுப்பையுணருவார்கள்? எந்த கவர்ன்மெண்டு தங்களை சரி சமானமாய் நடத்தவில்லை யென்று கடற்கரைகளில்

---

### எலும்பிலா நாக்கு இனி என்ன பேசுமோ!

சட்டசபையில் காங்கிரஸ் காரர்கள் சென்னை காங்கிரஸ்த் தீர்மானத்தை மகாத்மா காந்தி சொன்ன பிறகு சிறுபிள்ளைகள் தீர்மான மென்ற முடிவுக்கு வந்து விட்டார்கள் போலும். அதாவது இந்தியாச் சட்டசபையில் சென்னைக் காங்கிரஸ் தீர்மானத்துக்கு விரோதமாக நடந்து கொண்டதோடு காங்கிரஸ் வழியை காரியக் கமிட்டியில் மாற்றிவிடவும் ஆலோசனை செய்யப்படுகிறதாம். மாற்றியுமாச்சுதாம். உள்ளே நுழைந்து சண்டை செய்ய அவசியம் வந்து விட்டதாம். "வெள்ளிப்பனி மலையின் மீதுலவுவோம் அடிமேலைக்கடல் முழுதுங் கப்பல்விடுவோம்" எனச் சென்னையில் துள்ளிக்குதித்த காங்கிரஸ் வாதிகள் நாக்கு டில்லிக்குப் போனதும் வேறு விதமாகச் சொல்லுகிறது. இனி என்ன பேசுமோ!

### திருமண நன் கொடை.

நம் மித்திரனின் சந்தாநேயரும் மடத்துவிளை வாசியுமான ஸ்ரீமான் வே. ஏசுதாஸ நாடாரவர்கள், தமக்கும் குழையன் கரிசல் வாசி ஸ்ரீமான் மூ. ஆ. யாக்கோப் நாடாரவர்கள் சிரேஷ்ட புத்திரி திருவளர் செல்வி புஷ்பம் மாளுக்கும் 15—2—28—ல் நடை பெறவிருக்கும் திருமண சுபகாரியத்தை முன்னிட்டு நம்மித்திரனுக்கு அன்பு கூர்ந்தனுப்பிவைத்த ரூ 1—0—0ம் சந்தோஷத்துடன் கிடைக்கப்பெற்று அன்னவருக்கு எமது மன மார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். தம்பதிகள் சகல பாக்கியங்களும் பெற்றிலங்க இறைவன் கிருபாலிப்பாராக.

### பிரயாணம்.

நம் மித்திரன் அதிபரவர்கள் தமது சொந்த ஜோலியி னிமித்தம் இன்றைய தினம் (13—2—28) திருவனந்தபுரம் பிரயாணமாகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

கத்துகிறார்களோ, எந்தச் சட்டம் இந்தியர்களை சுயமரியாதையோடு வாழ்வு நடத்த விடவில்லையென்று சொல்லுகிறார்களோ, அந்தச் சட்டத்தை ஆதாரவாகக் கொண்டு நியமித்த உத்தியோகஸ்தரின் யோசனையை அநுசரித்து, நாங்கள் கூட்டத்தில் ஆஜராகவில்லையென்று சொல்லுவோர்களா தேசத்தின் தலைவர்கள்? தாங்கள் செய்யவேண்டுமென்று நினைத்த காரியங்கள் எங்குபோய் முடிவுறும் என்று யோசிக்க முடியாத புத்திமான்களா தேசமக்களுக்கு வழிகாட்டுவோர்கள்? சாதாரண ஜனங்களையும் தொழிலாளிகளையும் வேலைநிறுத்தஞ் செய்யும்படி காங்கிரஸ் பணத்தைச் செலவு செய்து பிரசாரஞ் செய்த பெரியதனக்காரர்களின் பேச்சைக் கேட்டு வேலை நிறுத்தஞ் செய்ததோடல்லாமல், அவர்கள் கொள்கையை நிறைவேற்றுவதற்காக தங்களுடன் இருந்து வேலை செய்தவர்கள் தூண்டுதல் செய்தபடி கடைகளைக் கொள்ளையடித்தும் கவர்ன்மெண்டு காரியாலயங்களையும் உத்தியோகஸ்தர்களையும் தாக்கியும் தங்கள் மீது பழியேற்றுக்கொண்டதுமல்லாமல் எந்தத் தலைவர்கள் பேச்சைக் கேட்டு தாங்கள் வேலை நிறுத்தஞ்செய்து வருமானத்தை யிழந்தார்களோ, அந்தத் தலைவர்களாலேயே காலிகள் என்ற பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பொதுமக்களுக்காக, வருந்துவதா, சிரிப்பதா என்பது தெரியவில்லை. அந்தோ! பாரதமக்களே! உங்கள் சகோதரர்களுக்குள் அபிப்பிராயமிருந்தால் அதற்காகக் கடைகளைக் கொள்ளையடிப்பதினால் சுயராஜ்ஜியம் வந்துவிடுமென்று நினைக்கிறீர்களா? உங்கள் எதிர்க்கட்சியார் சொல்வதைக் காதுகொடுத்துக் கேள்க்கும் படி மகாத்மாகாந்தியடிகள் பன்முறையுங் கூறியது உங்களுக்குத் தெரியாதா? அபிப்பிராய பேதத்துக்காக கொள்ளையடிக்கும் நீங்கள் தானா! உங்கள் சகோதரர்கள்—முக்கியமாய் ஆதி இந்துக்களுக்கு சுயராஜ்ஜியம் வந்த பிற்பாடு நம்முடைய குடும்ப வழக்கை நாம் தீர்த்துக் கொள்ளலாம்; இப்போது வேலைநிறுத்தஞ் செய்யுங்களென்று வேண்டுகோள் விடுக்கத் தகுதியுள்ளவர்கள். ராயல் கமிஷனிடம் தங்களுக்கு வேண்டியதைக் கேள்க்க வேண்டுமென்று தீர்மானிப்பதற்காகக் கூடிய கூட்டத்தை 30 பேர் சேர்ந்த கூட்டமென்று கூறி கீழ்மைப்படுத்த நினைக்கும் தலைவர்களைப் பின்பற்றியா நீங்கள் சுயராஜ்ஜியம் பெறப் போகிறீர்கள்? வெட்கம்! வெட்கம்!!

பிராமணரல்லாதார் சார்பாக நடந்து வரும் பத்திரிகைகளெல்லாம் பகிஷ்காரம் என்பது பார்ப்பனர் நன்மைக்காகச் செய்யும் சூட்சியென்பதையும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற கொள்கையை ராயல் கமிஷன் ஏற்றுக்கொண்டால் மாகாண சட்டசபைகளிலும் இந்தியா சட்டசபை ராஜாங்க சபை முதலிய இடங்களிலும் இப்போது போல ஐயரும் ஐயங்காருமாக அமர்ந்து விடமுடியாதே என்னும் பயமானது பார்ப்பனர்களைப் பீடித்து வருத்தியதை மாற்றுவதற்காகவே, 1914-ம் வருஷத்திலேயே கமிஷன் நியமிக்க வேண்டுமென்று இந்தியா சட்டச்சபையில் தீர்மானங்கொண்டு வந்து நிறைவேற்றிய பார்ப்பன ராஜீய வாதிகள், காங்கிரஸில் ராயல் கமிஷன் பகிஷ்காரத் தீர்மானத்தை நிறைவேற்றிக் கொண்டார்களென்று ஓயாது கூக்குரலிட்டும் பொது ஜனங்கள் பார்ப்பனர்களும், அவர்களது அடிமை புகுந்த பார்ப்பனரல்லாத சகாக்களும் சொல்லிய புரட்டுப் பேச்சுக்களை நம்பி யேமாந்த பார்ப்பனரல்லாதாரும் உண்மையை உணரும்படி பார்ப்பன வக்கீல்கள் ஐக்கோர்ட்டில் வழக்கம்போல ஆஜரானதினாலே ஐக்கோர்ட்டிலுள்ள வக்கீல் சங்க அறையும்; அச்சுவேலை செய்யுமிடமும் ஏன்—கோர்ட்டு நடக்கும் அறைகளையுங் கூடத் தாக்கக்கூடிய மனோபாவமும் மோட்டார் வண்டியில் கோர்ட்டுக்குச் செல்லுவோரைக் கல்லாலடித்து மோட்டார் வண்டியையே கொளுத்தும்படியும் சேர்ந்து விட்டதென்பதை மறுக்கமுடியுமா?

காங்கிரஸ்காரர்களால் சர்க்கார் தாஸர்களென்று பட்டஞ்சூட்டப் பெற்ற பிராமணரல்லாதார் கக்ஷித்தலைவர்களும் அவர்கள் கக்ஷியில் பற்றுள்ளங் கொண்ட பிராம[illegible]

செய்வதை அக்ஷேபித்து வேலை செய்திருக்கும்போது, அவர்களே கடையடைக்கும்படி தூண்டுதல் செய்து கொள்ளையடித்தார்களென்று ஜாடையாகக் குறிப்பிட முன் வந்த "சுதேச மித்திரன்" "தமிழ் நாடு" போன்ற தேசியப் பத்திரிகைகளின் புத்திப் போக்கின் தன்மைதான் என்னே! இவைகளா தேசியம் என்பதை ஜனங்களுக்குப் போதிக்கப் போகின்றன? காங்கிரஸ் தீர்மானம் அஹிம்ஸா தர்மத்தைக் கொள்வது என்றிருப்பதால், பலாத்காரத்தால் சுயேச்சை பெறுவதில் எனக்கு நம்பிக்கையிருந்தாலும் இப்போது அதை நடத்துவதற்கில்லை என்னும் பொருள்பட "தமிழ்நா"டில் வெளிவந்த அபிப்பிராயம், ரகசியத்தில் பலாத்காரத்தைத் தூண்டியிருக்கமாட்டார்களென்று நம்புவதற்கு இடமிருக்கிறதா? இவைகளையெல்லாம் யோசித்தால் காங்கிரஸை நடத்துவோர்கள் பலாத்காரத்தில் அந்தரங்க நம்பிக்கையும், வெளியில் அஹிம்ஸாதர்மப் பேச்சும் உடையவர்களென்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கும்.

இதற்காதாரமாக மதுரையில் நடந்த ஒரு விஷயத்தையும் எடுத்துக் காட்டுவது அவசியமாயிருக்கிறது. பகிஷ்காரத்தை முன்னிட்டு ஹர்த்தால் நடத்தவேண்டுமென்று காங்கிரஸ்கட்சியும், ஹர்த்தால் நடத்தி வீண் நஷ்டமடைய வேண்டாம்; பகிஷ்காரமென்பது வெறும் ஹம்பக் என்று எதிர்ப்பிரசாரம் செய்யும் ஒரு கட்சியும் பல கூட்டங்கள் நடத்தி தங்கள் கொள்கைகளை பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லி வந்தார்கள். காங்கிரஸ்காரர்கள் உண்மையுள்ளவர்களாயின் தங்கள் கொள்கையை ஜனங்கள் எவ்வளவு தூரம் ஆதரிக்கிறார்களென்று அஹிம்ஸா தர்ம முறையில் கவனித்து வரவேண்டியதே முறையாகும். ஆனால் நடந்ததென்ன? காங்கிரஸ்காரர்களால் அமர்த்திக்கொள்ளப்பட்ட காலிக் கூட்டங்கள் ஒன்று சேர்ந்து ஹர்த்தால் (வேலை நிறுத்தம்) செய்யப் பிரியமில்லாமல் கடை திறந்து வைத்தவர்களைத் தாக்கியும் கடைகளில் சாக்கடைச் சேற்றை வாரியடித்தும் பகிஷ்காரத்துக்கு எதிராக வேலை செய்த ஒரு கனவான் வீதியில் செல்லும்போது அவர்மேல் சேற்றை வாரியிறைத்தும் முனிஸிபல் கக்கூஸ் வண்டியை வீதியில் குடை கவிழ்த்துவிட்டு துர்காற்றத்தால் ஜனங்களுக்கு சுகக் கேட்டை யுண்டாக்கியும் வீட்டைக் கொள்ளையடிக்கப் போவதாகப் பயமுறுத்தியும் பலாத்காரத்தால் அடக்கிவிடப் பிரயத்தனப் பட்டு கடைசியாக வீட்டுக் குடையவரான கனவானும் தற்காப்புக்காக துப்பாக்கியை எடுத்துக்கொண்டவுடனே, காங்கிரஸ் தொண்டர்களெனப் பேர்வைத்துக் கொண்ட பார்ப்பனப் பித்த லாட்டக்காரர்கள் இனி தங்கள் தலை உருண்டு விடுமென்று அஞ்சி அதுவரையும் தாங்கள் இந்திர லோகத்திலிருந்தது போலவும் அப்போதுதான் தங்களுக்குத் தாக்கல் தெரிந்தது போலவும் வந்து கூட்டத்தை வேறு பக்கத்துக் கலைத்துப்போய் கடை திறந்திருந்தவர்களைப் பயமுறுத்தி கடைகளை மூடும்படி செய்துவிட்டார்கள்.

அந்தோ! காங்கிரஸ் தாஸர்களே! உங்கள் பித்தலாட்டங்கள் இன்னும் எவ்வளவு காலந்தான்செல்லும்? உங்கள் சுயநலக் கொள்கையை அறிந்து கொள்ள பகிஷ்காரம் பொது மக்களுக்கு மிகவும் உதவியாயிருந்தது. இனிமேல் உங்கள் பலாத்கார அடக்கு முறைக்கு ஜனங்கள் உள்படமாட்டார்கள். போலீஸார் உதவி செய்வார்களென்று எதிர் பார்த்திருந்த பொதுஜனங்கள் ஏமாந்து போனார்களாயினும், இப்போது தன் கையே தனக்குதவி என்பதைத் தெரிந்து கொண்டார்கள். இனி எச்சரிக்கையாயிருங்கள்.

போலீஸ் இலாக்காவில் பல வகையிலும் பார்ப்பனர் புகுந்ததின் பலன், பார்ப்பனரல்லாதாருக்குத் தீமையாய் முடியுமென்பதை, சென்னையிலும் மதுரையிலும் பார்ப்பனரல்லாதாரும் ஐரோப்பியர்களும் நன்றாய் உணர்ந்து கொண்டதாகத் தெரிகிறது. இனிமேலும் பார்ப்பன ரல்லாதார் தூங்கிக்கொண்டிருப்பின் மத விஷயத்தில் [illegible]

பார்ப்பனருக்கு அடிமைகளாய் அவர்களுடைய பலாத்கார அடக்குமுறைக்கு ஆட்களாக வேண்டிவருமென்று எச்சரிக்கையா யிருங்கள்.

சம தரும வாதி.

## சுடுகாடாவது சத்திய மூர்த்திக்குக் கொடுக்கக்கூடாதா?

"ஐதராபாத் புல்லட்டின்" பத்திரிகை எழுதுகிறது:—

காங்கிரஸ் மகாநாடு கூடுகிற இடத்திலெல்லாம் தற்காலீகமாக பட்டணங்கள் கட்டுவதும், அவற்றுக்கு பேர்கள் கொடுப்பதும் காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு பைத்தியமாகி விட்டிருக்கிறது.

முந்தின வருடங்களில் கட்டப்பட்ட பாதி நகரும், காந்தி நகரும் மறைந்து விட்டன. இப்போது சென்னையிலே "அன்சாரியார்பாத்" என்ற காங்கிரஸ் நகர் கட்டப்பட்டது. அந்த நகரின் பல பாகங்களுக்கும் ஸ்ரீநிவாச மால், விஜயராகவ வீதி, பெஸன்ட் வீதி, சரோஜனி வீதி, மாளவியா மைதானம், அன்சாரி அவனியு, காந்தி நிலம், தேசபந்து கொட்டகை என்று பெயர்கள் கொடுக்கப்பட்டிருந்தன.

காங்கிரஸ் காலத்திலே, வாழ்க்கையின் ஒவ்வொரு நிலைமைக்கும் தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக மேற்படி பெயர்களால் வெளிப்படுகிறது. ஆனால் ஒரே யொரு விஷயம்—அதாவது, ஒரு சுடுகாடுமாத்திரம் விட்டுப் போயிருக்கிறது. அந்தச் சுடுகாட்டை மறைக்கமுடியாத திரு. சத்திய மூர்த்தியின் பெயரால் "சத்திய மூர்த்தி சுடுகாடு" என்று அழைத்திருக்கலாம்.

திராவிடன்.

## செய்தித்திரட்டு.

ரெங்கூனில் மாக்கிரேசார் தேக்கு மில்லில் தேக்கு மரங்களை யடுக்கியிருந்த சொட்டனையில் தீப் பற்றி இருட்டிலிருந்த 900 டன் தேக்கும் தீக்கிரையானது. மில் வேலை யின்றிக் கிடப்பதால் எதாவது விஷமத்தனத்தால் நெருப்புப் பிடித்திருக்கலாமென யூகிக்கப்படுகிறது. நஷ்டம் 2 லட்சம் ரூபாய்க்கு மதிப்பிடப்படுகிறது. ஷைமில் இன்ஷ்யூர் செய்யப்பட்டுளது.

*　　*

மலேரியா எனும் விஷக் காய்ச்சலை விர்த்திபண்ணுகிற கொசுக்களை யொழித்து அதன் பயனாய் அவ் விஷக் காய்ச்சலும் ஒழிவதற்கு நத்தைகளை உபயோகிக்கும் ஓர் புதிய வழியை கல்கத்தாவில் டாக்டர் ஹேமசிங்க புருதி கண்டுபிடித்திருக்கிறார்.

*　　*

டாக்டர். கார்லின்மாக் இந்தூர் மாஜி மன்னர் தமக்கு ரூபாய் 5250 தர வேண்டிய திருக்கிற தென கொளும்பு ஜில்லாக் கோர்ட்டில் வழக்குத் தொடுத்திருக்கிறார். வழக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

*　　*

ரங்கூனில் ஒரு பர்மிய அரிசி வியாபாரி ரூபாய் 100,00-0-0 கொண்டு தெருவில் போய்க் கொண்டிருக்கும் போது சிலர் அவரை மறித் தடித்து பணத்தைப் பறித்துக் கொண் டோடி விட்டார். இது சம்பந்தமாய் மூன்று பேர்கள் கைது செய்யப்பட்டு அவர்களிட மிருந்து ரூபாய் 250—0—0 வெளிக்கிளம்பி யிருக்கிறது. போலீஸார் இன்னும் புலன் விசாரித்து வருகிறார்கள்.

*　　*

பாரசீக தேசத்தில் குளிர் மிகுந்திருக்கிறது. குளிர் தாங்க முடியாமல் ஜனங்கள் உயிர் துறக்கிறார்கள். தெருவெங்கும் பிரேதங்கள் குவிகின்றன.

*　　*

விஷக் காற்றை ஒழிக்கும் பொருட்டு புதியதாக ஒரு காற்றை ருஷிய ரசாயன சாஸ்திரிகள் கண்டு பிடித்திருக்கின்றனர். கொல்லும் சக்தி வாய்ந்த விஷக் காற்றை பயனற்றதாய்ச் செய்யும் குணம் உண்டு இப் புதிய காற்றுக்கு.

*　　*

20 கோடி வருஷத்திற்கு முன்னிருந்ததாகச் சொல்லப்படும் மூன்று கண்களுள்ள ஒருவனுடைய உடல் வார்விக்ஷயர் துறை முகத்திற் கருகிலுள்ள கல் உடைக்கு மிடத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. இது பற்றி பெருத்த பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

*　　*

அமெரிக்க தலைவர் ஸ்ரீ கெல்லாக் தற்போதிருக்கும் நீர் மூழ்கிக் கப்பல்களை ஒழித்து விடுவதோடு இனி நீர் மூழ்கிக் கப்பல்கள் செய்யக் கூடாதென்றும் உலகிலுள்ள தேசங்களைக் கேட்டுக் கொள்ள உத்தேசித்திருக்கிறார்.

*　　*

அமெரிக்காவில் பால்ரிவர் என்னும் நகரில் ஒரு பெரிய தீ விபத்தேற்பட்டு, பல மில்களும், வர்த்தக சாலைகளும், மற்றும் பல கட்டடங்களும் சேதமாகி 20 பேர்கள் மாணமடைந்தும், 20 பேர்கள் பலத்த காயமடைந்தும் போனார்கள். மொத்தம் ஒரு கோடி பவுன்களுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

*　　*

திருப்பதி மகந்துவின் சீடர் ரகுவீர தாஸரின் பணப் பெட்டியை உடைத்து அதிலுள்ள ரூபாய் 10000 பெறுமான நகைகளையும், ரூபாய் 5000 ரொக்கமும் யாரோ களவு செய்திருக்கிறார். போலீஸார் புலன் விசாரித்து வருகிறார்கள்.

*　　*

இந்திர நதியில் ரூகான், தோலத்பூர் ஆகிய விடங்களுக்கு மத்தியில் ஒரு படகு விபத்து ஏற்பட்டு அப்படகிலுள்ள 26 பேர்களில் 15 பேர்கள் மூழ்கி மாண்டனர். காப்பாற்றப்பட்ட 11 பேர்களில் நால்வர் பெண்கள் என பம்பாய் "ஈவனிங் நியூஸ்" பத்திரிகை பகர்கிறது.

*　　*

தமது பெயரை வெளியிடாது ஒரு கனவான் பிரிட்டிஷ் சுஜனுவுக்கு 5 லட்சம் பவுன் நன்கொடை யளித்திருக்கிறார். இந் நன்கொடை பாரிங் பிரதர்ஸ் பாங்கில் செலுத்தப்பட்டிருக்கிறது. வட்டி மிகுந்த பின் தேசியக் கடனைத் தீர்க்க இப் பணம் உபயோகிக்கப்படும்.

*　　*

கல்கத்தாவில் காப்பு வரி விசாரணைச் சபை முன் ஈஸ்ட் இந்தியா தீக்குச்சி ஆலையின் பிரதிநிதி எம். என். மேட்டா சாக்ஷியம் கொடுக்கையில் இந்தியத் தீக்குச்சித் தொழில் அபிவிர்த்தி யடைந்து ஸ்திரமாகு மாறு சீக்கிரமே உடன் தேசத் தீக்குச்சிக்கு வரி விதிக்கலா மென்றும்; இந்தியா பூராவும் இந்தியத் தீக்குச்சிகளே உபயோகிக்கப்பட்டு விட்டால் அந்நிய தேச தீக்குச்சிகளின் இறக்குமதி தானாகவே நின்று விடு மென்றும் கூறினர்.

*　　*

ஸ்டாண்டர்டு ஆயில் கம்பெனிக்கும், ராயல் டச்சுக் கம்பெனிக்கும் மண்ணெண்ணெய்ப் போட்டி சம்பந்தமாக நடந்து வரும் சச்சரவுகளைத் தீர்க்கும் பொருட்டு இரு கம்பெனிப் பிரதிநிதிகளும் நியுயார்க்கிற்கு வந்திருக்கின்றனர். கூடிய சீக்கிரத்தில் ராசி யேற்படும் எனத் தெரிகிறது.

*　　*

இத்தாலியில் ஜெனரல் நோபிலி என்பவர் துருவத்திற்குச் செல்லும் பொருட்டு "இத்தாலியா" என்னும் ஓர் ஆகாய விமானத்தை தயார் செய்து வருகிறார். வரும் எப்பிரல் மாதத்தில் பிரயாணமாகலா மெனத் தெரிகிறது.

*　　*

திருநெல்வேலி டவுன் நதிக்கு அக்கரையிலுள்ள குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த 5 ஸ்திரீகள் அவ் வாற்றைக் கடக்க இறங்கினார்கள். ஒரு துறையில் ஆழ மதிகமா யிருக்க முன்னால் வந்த 3 பெண்கள் மூழ்கி விட்டனர். மற்று மிருவர் நடு வாற்றில் கழுத்தளவு தண்ணீரில் தத்தளித்துக் கொண்டு நின்றனர். அது சமயம் பக்கத்தில் ஸ்நானம் பண்ணிக் கொண்டிருந்த பாளையங்கோட்டை சாரணப் படை உதவித் தலைவர் ஸ்ரீ ஞானசிகாமணி ஜோஷிவா என்ற கிறிஸ்தவ வாலிபர் அப்பெண்களின் நிலைமையைப் பார்த்ததும் தீரத்துடன் நீரிற் பாய்ந்து மூழ்கிய மூவரையும், மற்று மிருவரையும் கரை சேர்த்து அவர்களின் உயிர் காத்தார். என்னே இச்சாரணரின் சமய உதவி!

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹம்.

மகாத்மா காந்தி எழுதியது.

### இரண்டாம் அத்தியாயம்.

#### தேச சரித்திரம்.

முதல் அத்தியாயத்தில் சுருக்கமாகக் கூறிய தேச அமைப்புப் பிரிவினைகள் பழமையானவை அல்லவே யல்ல.

பூர்வ காலத்தில் தென்னாப்பிரிக்காவில் வசித்த குடி மக்கள் யார் என்று திட்டமாக நிர்ணயிக்க முடியவில்லை. ஐரோப்பியர்கள் தென்னாப்பிரிக்காவில் குடியேறிய போது அங்கே நீகிரோவர்களைக் கண்டார்கள். அமெரிக்காவில் அடிமைகளாயிருந்து தப்பித்துக்கொண்டு ஆப்பிரிக்காவுக்கு ஓடி வந்தவர்களின் சந்ததிகள் அவர்கள் என்று கருதப்படுகிறது. அவர்களில் ஸூலூக்கள், ஸ்வாஸிகள், பஸுதோக்கள், பெசுவாக்கள் என்னும் பற்பல சாதியார் உண்டு. அவர்கள் பேசும் பாஷைகளும் பலவாகும். இந்த நீகிரோவர்களையே தென்னாப்பிரிக்காவின் பூர்வ குடிகள் என்று கருத வேண்டும். ஆனால் தென்னாப்பிரிக்கா மிகப் பெரியதேசமாகும். அதில் தற்போதுள்ள நீகிரோவர்களைப்போல் 20,30 மடங்கு ஜனங்களுக்கு அந்நாடு உணவளித்துக் காப்பாற்றக்கூடும். ரயில் பாதை மூலமாகக் கேப்டவுனிலிருந்து டர்பன் 1,800 மைல் தூரம் இருக்கிறது. கடல் மூலமான வழியும் ஆயிரம் மைலுக்குக் குறைவில்லை. நான்கு மாகாணங்களினுடையவும் மொத்த விஸ்தீரணம் 4,73000 சதுரமைல். 1914-ம் ஆண்டில் இந்தப் பெரிய பிரதேசத்தில் வசித்த நீகிரோவர்களின் தொகை 50 லட்சம். ஐரோப்பியர்களின் தொகை சுமார் 12½ லட்சந்தான்.

நீகிரோவர்களில் மிக உயரமானவர்களும் அழகியவர்களும் ஸூலூக்களே யாவர். நன்கு யோசனை செய்தே 'அழகியவர்கள்' என்று நான் சொல்கிறேன். சிவப்பு அல்லது வெள்ளை நிறமும் கூரிய மூக்குமே அழகுக்கு இலக்ஷியங்கள் என்று நாம் எண்ணிக்கொண்டிருக்கிறோம். இந்தக் குருட்டு நம்பிக்கையை ஒரு கணம் உதறிவிட்டு நாம் சிந்தித்தோமானால் பிரம்ம தேவன் ஸூலூ சாதியானைப் படைத்தபோது கொஞ்சமேனும் அசட்டை காட்டவில்லை யென்பதை உணர்வோம். ஸ்திரீகளும் சரி, புருஷர்களும் சரி, நல்ல உயரமும், உயரத்துக்கேற்ற மார்பகலமும் உள்ளவர்கள். திடகாத்திர சரீரிகள். அவர்களுடைய குதிகால்களும், புஜங்களும் தசைநார் பொருந்தி உருண்டை வடிவாயிருக்கும். அவர்களில் முதுகு வளைவுடனே, கூனுடனே நடப்பவர்களைக் காணவேமுடியாது. அவர்கள் உதடுகள் பெரியவை; தடித்தவை என்பது உண்மையே. ஆனால் மற்ற உறுப்புக்களுடன் பொருத்தமாய் அமைந்திருப்பதால் அவை விகாரமானவை யென்று நான் கூறமாட்டேன். அவர்களுடைய கண்கள் உருண்டையாயும் ஒளி பொருந்தியும் இருக்கும். மூக்கு, பெரிய முகத்துக்கேற்றவண்ணம் தட்டையாயும் பெரிதாயும் இருக்கும். தலையில் சுருள் சுருளாகத் தொங்கும் மயிர், கருங்காலியைப்போல் பிரகாசமான கறுப்பு வர்ணமுடைய தோலுக்கு இன்னும் அழகு தருவதாயிருக்கிறது. தென்னாப்பிரிக்காவிலுள்ள பற்பல சாதியாருக்குள்ளும் அழகிற் சிறந்தவர்கள் யார் என்று ஸூலூ சாதியான் ஒருவனைக் கேட்டால் அவன் சிறிதும் தயக்கமின்றித் தன் சாதியின் சார்பாகவே முடிவு செய்வான் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அப்படி அவன் முடிவு செய்வது அவனுடைய பகுத்தறிவுக்கு இழுக்குத் தருவதாகாது என்று நான் சொல்வேன். ஐரோப்பாவில் ஸாண்டோ முதலியவர்கள் செய்து வருவது போன்ற முயற்சிகள் எதுவுமின்றி இயற்கையிலேயே ஸூலூ சாதியான் நன்கு அமைந்த உறுப்புக்களையும், நல்ல தேகக் கட்டையும் பெற்றுள்ளான். பூமத்திய ரேகைக்கு அருகில் வசிக்கும் சாதியாரின் தோல் கறுப்பு நிறமாயிருத்தல் இயற்கை நியதியாகும். இயற்கையில் உண்டான எல்லாப் பொருள்களிலும் அழகு இருந்தே தீரவேண்டுமென்று நாம் நம்பினால், அழகைப்பற்றிய ஒரு தலைச்சார்பான, குறுகிய கொள்கைகளை விட்டு விடுவோம். மற்றும், இந்தியாவில் பிறந்த நாம் நம்முடைய தோலே சிறிது கறுப்பாயிருந்து விட்டால் அது குறித்து வெறுப்பும், வெட்கமும் அடையும் தகாத உணர்ச்சியிலிருந்து விடுதலையடைவோம்.

நீகிரோவர் புல்லினாலும் மண்ணினாலும் வட்ட வடிவமாக அமைக்கப்பட்ட குடிசைகளில் வசிக்கிறார்கள். குடிசைக்கு ஒரே ஒரு வட்டமான சுவரே இருக்கும். வைக்கோலினால் கூரை வேயப்பட்டிருக்கும். உள்ளே ஒரே ஒரு தூண் கூரையைத் தாங்கி நிற்கும். வீட்டுக்கு ஒரு சிறு வாயில் மட்டுமே உண்டு. அதன் மூலம் உள்ளே நுழைவதென்றால் குனிந்தே செல்லவேண்டும். காற்றோட்டத்திற்கும் அஃது ஒன்றே வழி. வாசலுக்கு அநேகமாகக் கதவு இராது. நம்மைப் போலவே நீகிரோவர்களும் சுவரையும், தரையையும் மண்ணினாலும், சாணத்தினாலும் மெழுகுகிறார்கள். நீகிரோவர்களால் நாலு மூலைச் சதுரமாக எந்தப்பொருளையும் செய்யமுடியாதென்று சொல்லப்படுகிறது. அவர்கள் உருண்டையான பொருள்களைப் பார்த்தும் செய்துமே தங்கள் கண்களைப் பயிற்சி செய்திருக்கிறார்கள். இயற்கை சிருஷ்டியில் நேர் கோடுகளையோ, மூலையுள்ள கோணங்களையோ நாம் காண்கிறோமில்லை. இயற்கையின் புதல்வர்களாகிய நீகிரோவர் இயற்கையைப் பார்த்தே தங்கள் அறிவை யெல்லாம் பெற்றிருக்கிறார்கள்.

குடிசையிலுள்ள தட்டுமுட்டுச் சாமான்கள் குடிசையின் எளிமைக்குத் தகுந்தனவாகவே இருக்கும். மேஜை, நாற்காலி, பெட்டி முதலியவற்றிற்கு அங்கு இடமே கிடையாது. தற்போது கூட அவர்களுடைய குடிசைகளிலே இத்தகைய பொருள்களை மிக அருமையாகவே காணலாகும். ஐரோப்பிய நாகரீகம் வருவதற்கு முன்னால் நீகிரோவர் மிருகங்களின் தோல்களை உடுத்துவது வழக்கம். அத்தோல்களையே சமுக்காளங்களாகவும் படுக்கை விரிப்புக்களாகவும் உபயோகிப்பார்கள். இந்நாளில் அவர்கள் கம்பளிகளை உபயோகப்படுத்துகிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுவதற்கு முன் ஸ்திரீகளும் சரி, புருஷர்களும் சரி ஏறக்குறைய நிர்வாணமாகவே நடமாடுவது வழக்கம். இப்போது கூட நாட்டுப் புறங்களில் அப்படியிருப்போர் உண்டு. இடுப்பைச் சுற்றி மட்டும் தோல் துண்டைச் சுற்றிக் கொண்டிருப்பார்கள். சிலர் இது கூடச் செய்வதில்லை. ஆனால் இந்த ஜனங்கள் தங்கள் புலன்களைக் கட்டுப்படுத்த முடியாதவர்களென்று யாரும் ஒரு கணமும் எண்ணவேண்டாம். பெரிய சமுகம் ஒன்றில் ஒரு வழக்கம் அனுசரிக்கப்படுமாயின், அது மற்றொரு சமுகத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பெரிதும் தகாத பழக்கம் என்று தோன்றினாலும் அந்தச் சமுகத்தில் அது சற்றும் தீமையில்லாததா யிருக்க முடியும். ஒருவரை யொருவர் வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்க இந்த நீகிரோவர்களுக்கு நேரமே கிடையாது. நிர்வாணமாய் ஸ்திரீகள் குளித்துக்கொண்டிருந்த இடத்தின் வழியாய்ச் சுகதேவர் சென்றபோது அவர் உள்ளம் சிறிதும் களங்க முறவில்லையென்றும், அந்த ஸ்திரீகளும் மனக்கலக்கமோ, வெட்க உணர்ச்சியோ சிறிதும் அடையவில்லை யென்றும் பாகவதத்தில் சொல்லிப்பட்டிருக்கின்றது. இதில் அமானுஷ்யமானது எதுவும் இருப்பதாக நான் கருதவில்லை. இந்தியாவில் இன்றையதினம் மேற்கூறியது போன்ற நிலைமையில் தூய உள்ளத்துடன் இருக்கக் கூடியவர் ஒருவரும் இல்லையெனில், அது நமது வீழ்ச்சியைக் காட்டுமே யல்லாது வேறில்லை. மனிதன் அத்தகைய தூய நிலையை முயன்று அடைய முடியாதென்று அதிலிருந்து ஏற்படாது. நீகிரோவர்களைக் காட்டுமிராண்டிகளென்று கருதுதல் நமது அகங்காரத்தின் விளைவேயாகும். அவர்கள் நாம் கருதுவது போன்ற காட்டுமிராண்டிகள் அல்லர்.

நீகிரோ ஸ்திரீகள் பட்டணங்களுக்குச் செல்லுகையில் மார்பிலிருந்து முழங்கால் வரையில் மூடிக்கொள்ள வேண்டுமென்பது தற்போதைய சட்டம். ஆதலின் அவர்கள் கட்டாயமாக உடம்பில் துணி சுற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே அந்த அளவுள்ள துணிகளுக்குத் தென்னாப்பிரிக்காவில் கிராக்கி அதிகம். அத்தகைய துணிகளும், கம்பளிகளும் ஆயிரக் கணக்கில் ஐரோப்பாவிலிருந்து வருஷந்தோறும் இறக்குமதி செய்யப்படுகின்றன. மனிதர்களும் அவ்வாறே இடுப்பிலிருந்து முழங்கால் வரையில் உடம்பை மூட வேண்டுமென்பது சட்டம். ஆதலின் ஐரோப்பாவிலுள்ள ஜனங்கள் அணிந்து கழித்துவிட்ட பழந்துணிகளை அநேகர் தரித்துக் கொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள். சிலர் ஒரு வகை சராய் அணிகிறார்கள். இத்துணிகள் எல்லாம் ஐரோப்பாவிலிருந்தே வருகின்றன.

நீகிரோவர்களின் பிரதான உணவு சோளமும், கிடைக்கும்போது மாமிசமுமாகும். அதிஷ்ட வசமாக அவர்களுக்கு மசாலை தாளிப்பு முதலியவை தெரியவே தெரியா. அவர்கள் உணவில் தாளிப்பைக்கண்டு விட்டால் அல்லது மஞ்சள் சேர்த்து நிறம்மாறியிருப்பதைப் பார்த்தால் கூடச் சாப்பிட மாட்டார்கள். அவர்களில் முற்றும் அநாகரீகமானவர்கள் என்று கருதப்படுவோரும் அத்தகைய உணவைத் தொடமாட்டார்கள். ஸூலூ ஒருவன் ஒரு ராத்தல் வேகவைத்த சோளத்தைக் கொஞ்சம் உப்பு மட்டும் சேர்த்துக்கொண்டு தின்றுவிடல் அசாதாரணமன்று. சோளக் கூழ் குடித்து விட்டு அவன் திருப்தியுடன் காலங் கழித்துவிடுவான். மாமிசம் அகப்படும் போதெல்லாம் அவன் பச்சையாகவோ, சமைத்தோ, வேகவைத்தோ, சுட்டோ கொஞ்சம் உப்பு மட்டும் கலந்துகொண்டு தின்று விடுவான். எந்த மிருகத்தின் மாமிசம் தின்பதற்கும் அவன் ஆட்சேபிப்பதில்லை.

நீகிரோ பாஷைகள் பற்பல சாதியாரின் பெயர்களாலேயே வழங்குகின்றன. எழுதும் வித்தை சமீப காலத்திலேயே ஐரோப்பியர்களால் புகுத்தப்பட்டது. நீகிரோ பாஷைகளுக்கு எழுத்துக்கள் கிடையா. பைபிள் முதலிய புத்தகங்கள் இப்போது நீகிரோ பாஷைகளில் ரோமன் எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. ஸூலூ பாஷை மிக இனிமை பொருந்தியதாகும். பெரும் பாலான வார்த்தைகள் 'ஆ' என்னும் சத்தத்துடன் முடிவு பெறுகின்றன. ஆதலின் அப்பாஷை காதுக்கு மிருதுவாயும், இன்பமாயும் தொனிக்கிறது. அம்மொழியின் வார்த்தைகளில் பொருளும், கவிதையும் உண்டென்று நான் கேள்விப் பட்டிருக்கிறேன். நான் தெரிந்து கொள்ள நேர்ந்த சில வார்த்தைகளிலிருந்து மேற்படி கூற்று நியாயமானதே என்று நான் சொல்லக்கூடும். நான் ஐரோப்பியப் பெயர்களால் குறிப்பிட்டிருக்கும் எல்லா இடங்களும் இனிமையும், கவிதையும் பொருந்திய நீகிரோ பெயர்கள் உண்டு. அவை எனக்கு நினைவில்லாத காரணத்தினால் இங்கு தாமுடியாதிருப்பது குறித்து வருந்துகிறேன்.

முன்பும் சரி, இப்போதும் சரி, நீகிரோவர்களுக்கு மதமே கிடையாதென்று கிறிஸ்துவப் பாதிரிமார் சொல்வார்கள். ஆனால் சமயம் என்பதை அதன் விரிந்த பொருளில் [illegible] கொண்டால், நீகிரோவர் மனித அறிவுக்கெட்டாத ஒரு பரம் பொருள் உண்டென்று நம்பி அதை ஆசரிக்கிறார்கள் என்று திட்டமாய்ச் சொல்லலாம். மேற்படி சக்திக்கு அவர்கள் அஞ்சுகிறார்கள். உடல் நாசமாகும் போது மனிதன் அடியோடு அழிந்து விடுவதில்லை யென்னும் அறிவு அவர்களுக்கு அவ்வளவு தெளிவாயில்லாவிடினும ஓரளவு இல்லாமற் போகவில்லை. சன்மார்க்கமே சமயத்தின் அடிப்படை என்பதை நாம் ஒப்புக் கொண்டோமாயின், நீகிரோவர் சன்மார்க்க முடையவர்களாதலால் சமய முள்ளவர்கள் என்றும் சொல்லலாம். சத்தியத்துக்கும் பொய்க்குமுள்ள வேற்றுமையை அவர்கள் நன்குணர்ந்திருக்கிறார்கள். நீகிரோவர் தங்கள் அநாகரீக நிலையில் எவ்வளவு தூரம் சத்தியத்தைக் கடைப்பிடிக்கிறார்களோ அவ்வளவு தூரம் ஐரோப்பியர்களாவது நாமாவது உண்மை கடைப்பிடிக்கிறோமோ என்பது சந்தேகத்துக்கிடமானது. அவர்களுக்குக் கோயில் அல்லது அதுபோன்ற வெதுவும் கிடையாது. மற்ற சாதியாரிடையே உள்ளவை போன்ற குருட்டு நம்பிக்கைகள் பல அவர்களிடையும் உண்டு.

(தொடரும்.)

## கும்பாபிஷேக நன்கொடை.

தஞ்சாவூர் ஜில்லா பொறையாறு ஸ்ரீகணேசர் ஆலய கும்பாபிஷேகத்திற்கு தென்னாப்பிரிக்கா, விரெயிடு ஜில்லா, வரிங்கோனில் என்னால் வசூலிக்கப் பெற்ற நன் கொடை விபரம் பின் வருமாறு:—

| | பவு-ஷி-பெ. |
|---|---|
| ஜி. மங்களம்-விரதார் | 0—3—0 |
| கே. ஓ- செஞ்சு நாயுடு | 0—3—0 |
| ஆர். எஸ். நாடார் | 0—3—0 |
| ஷெயிக்ஹூஸென் | 0—3—0 |
| நியுமைன்—மீரா | 0—2—6 |
| ராம்பிரசாத் | 0—2—6 |
| கோவிந்த ராஜலு | 0—2—0 |
| வி. ஆர். நாயுடு | 0—2—0 |
| பெரியசாமி—எளங்கால் | 0—2—0 |
| ஆரு படையாட்சி | 0—2—0 |
| என். ராமசாமி நாயுடு | 0—2—0 |
| தர்பன்—முனிஸாமி | 0—2—0 |
| டி. என். வி. 2. உமர்கான்ஸாஹிப் | 0...2—0 |
| லாங்—முனிஸாமி | 0—2—0 |
| கே. ராமசாமி நாயுடு | 0—2—0 |
| செங்க பிள்ளை | 0—2—0 |
| நாராயணசாமி நாயர் | 0—2—0 |
| பி. சின்னப்பா | 0—2—0 |
| எஸ். கே. மேனன் | 0—2—0 |
| எஸ். அண்ணாமலைபடையாக்ஷி | 0—1—0 |
| பி. ராஜு செட்டி | 0—1—0 |
| பீற்றர் முனிசாமி பிள்ளை | 0—1—0 |
| எஸ். ராஜா நாயுடு | 0—1—0 |
| கொல்லி நாத்-ராம்பிரசாத் | 0—1—0 |
| பண்டரி-சின்னப்பா | 0—1—0 |
| வெங்கடசாமி நாயுடு | 0—1—0 |
| நாகூர் மீராஸாஹிப் | 0—1—6 |
| கே. அப்பளசாமி நாயுடு | 0—1—0 |
| எம். சின்ன கிராமணி | 0—1—0 |
| எஸ். லால் சந்த் | 0—1—3 |
| பி. எஸ். அருணசலம் | 0—1—0 |
| எல். நாராயணசாமி | 0—1—0 |
| ராமச்சந்திரன் | 0—1—3 |
| எஸ். கிருஷ்ணசாமி | 0—1—0 |
| 1. நீர். வி. முனிசாமி | 0—1—0 |
| கரீப் சுதர்ஜீ | 0—1—0 |
| பி. முருகன் | 0—1—0 |
| ஜி. ராம்லால் | 0—1—3 |
| ஆறுமுக முதலி | 0—1—0 |
| கோவிந்தன் சாமு | 0—2—0 |
| பி. கரீப் அஹீர் | 0—2—6 |
| எம். ராமசாமி நாயுடு | 0—1—0 |
| நியுமைன்—நடேசன் | 0—2—0 |
| சில்லரை வசூல் | 2—3—0 |

ஆக மொத்த வசூல் பவு 8—14—0

ஆர். எஸ். நாடார்,
வரிங்கோன்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## திதி கொடுத்தல்.

(ஸ்ரீமான் க. வா. வேங்கிடாசலம் பிள்ளையவர்கள் "குடியரசு" பத்திரிகையில் எழுதியிருப்பது.)

இந்து மதஸ்தர்களென்னும் நாம் திதி கொடுத்தல் என்னும் ஒரு பிதுர் கர்மம் செய்துவருகிறோம். அதாவது, இறந்துபோன வமிச பெரியார்கள் மோட்சத்தைப் பெறும்படி செய்வதற்கென்று பிதுர்க்கள் இறந்துபோன திதி அல்லது நக்ஷத்திரத்தன்று அன்ன சிரார்த்தம், ஆத்மசிரார்த்தம் செய்தும் அவரவர்கள் சக்திக்கேற்பதான தருமங்களும் செய்துவருகிறோம். இந்தக் கிரிகைய வருஷம் ஒரு தரமாகிலும் இவர்களைப்பற்றி நினைப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கிறது.

### முதல் ஏமாற்றம்.

ஆனல் நாம் செய்துவரும் முறை மட்டும் ஒழுக்கமின்மையும் மூட நம்பிக்கையுமாக இருக்கிறதால் இதர மதஸ்தர்கள் கேலிசெய்யக் கூடியதாய் இருக்கிறது. முதலாவது நமது பிதுர்க்கள் செத்துப்போன நாள் நமக்குத் தெரியாது. அதைக் குறித்து வைக்க அக்கரையுமில்லை. இதை ஒரு புரோகிதர் மூலமாய் ஒவ்வொரு வருடமும் தெரிந்துகொள்ளுகிறோம். அந்தப் புரோகிதரோ நம்மைப்போல் ஆயிரம்பேருக்கு நாள் சொல்ல வேண்டியவராயிருக்கிறார். ஒரே தினத்தில் பத்துப்பேருக்கு திதி செய்து வைக்க வேண்டியுமிருக்கிறார். அப்படியிருக்க நம்மன்பிதுர்தினத்தை அவர் சவுகரியப்படியும் வரும்படியின் தாரதம்மியப்படியும் நாளையோ, நக்ஷத்திரத்தையோ மாற்றலாம். நாம் அத்தினத்தை விட்டுவிட்டு வேறு ஒரு தினத்தில் திதி கொடுக்கிறோம். இது முதல் ஏமாற்றம்.

### இரண்டாவது ஏமாற்றம்.

அப்படி வரும் புரோகிதர் தன்னைப் பிதுராகப் பாவித்துத்தனக்கே சோடசோபசாரம் செய்யும்படி செய்வித்து ஒவ்வொரு பதார்த்தத்தையும் வைக்கும்படி சமஸ்கிருதத்தில் சொல்லும்போது "இது ஏதோ மகாமந்திரம். கடவுளிடமிருந்து பிறந்தது. இந்த சக்தியினால்தான் இப்பதார்த்தங்களெல்லாம் பிதுர்க்களுக்குப் போய்ச் சேருகின்றன" என்று நாம் எண்ணி வீட்டிலிருக்கிற பதார்த்தங்களை ஒன்று விடாமல் வைத்து அதற்குத் தவறாமல் (சொர்ன புஷ்பம்) பணத்தையும் வைத்து புரோகிதர் போதாதென்று கோபிக்கும்போது "சுவாமி ஏதோ இவ் வருஷம் இருக்கட்டும். அடுத்த மாதம் எங்கள் தாயார் திதிக்கு எல்லாம் சேர்த்துக் கொடுத்துவிடுகிறேன்" என்று கெஞ்சிக் கேட்டதின் பேரில் புரோகிதர் முணு முணுத்துக் கொண்டு மூட்டை கட்டுவது இரண்டாவது ஏமாற்றம்.

### மூன்றாவது ஏமாற்றம்.

பிராமணனைப் பிரதக்ஷணம் செய்வது பிதுர்க்களைப் பிரதக்ஷணம் செய்வதாகப் பாவித்து தான்மட்டும் இந்த மூடத்தனத்திலீடுபட்டது போதாமல் உத்தமிகளாகிய தனது பத்தினிமார்களையும் புரோகிதனைச் சுற்றும்படி செய்து, அவர் கொடுக்கிற அழுக்குத் தண்ணீரை காலிரண்டும் கையிரண்டும் சேர்த்துவாங்கிக் குடித்துவிட்டு மேலுக்கும் தெளித்துக்கொண்டு "சுவாமி சுவாமி வீடெல்லாம் தெளியுங்கள்" என்றுசொல்லி அய்யரை முழங்கால் புழுதியோடு அழுக்கு வேஷ்டியோடு செம்புத்தண்ணீரை மாவிலையில் வீடு, வாசல், சமையல் வீடு, சுவாமி வீடு, படுக்கை வீடு, கக்கூஸ்வீடு இவைகளுக்கெல்லாம் தெளிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இதனல் சகல தீட்டுகளும் போய்விடுவதாக திருப்தியாய் விடுகிறது. புரோகிதரோ நமக்குக் கடவுளாகவும், பிதுர்வாகவும், தந்தையாகவுமிருந்து கறக்க வேண்டியதெல்லாம் கறந்து, அடையவேண்டிய மரியாதை யெல்லாம் அடைந்ததுடன் தானில்லாமல் ஒன்றும் செய்ய முடியாதென்று நாட்டிவிட்டுப் போகிறார். [illegible]

நமக்கோ அழுக்குத் தண்ணீரை குடித்தது, அள்ளி அள்ளிக் கொடுத்தது, அய்யர் காலைப் பிடித்தது, அப்பனென்று நடித்தது, அம்மா கற்பைக் கெடுத்தது இவ்வளவுதான் மிச்சம்.

### நான்காவது ஏமாற்றம்.

படித்தவர்களானலும் பாமரர்களானலும் எந்த விஷயத்தையும் ஆராய்ந்து எது நடக்கக்கூடியது; எது நடக்கக் கூடாதது என்று யோசிக்க வேண்டும். இந்து மதத்திலுள்ளவர்களுக்கு மட்டும் பிதுர்லோகம் இருந்து நாம் அனுப்புகிற பதார்த்தங்கள் புரோகிதர் மூலமாய் அங்கு போய் நமது பிதுர்க்களுக்குச் சேர்ந்து மோட்சமடைவதாயிருக்குமானல் திதி வகையறாக் கொடுக்காத இதர மதஸ்தர்களுடைய பிதுர்க்கள் கதி என்ன? இந்துக்களுக்குள்ளேயே பெரும் பாலோர் இக்கர்மம் செய்யாது இருக்கிறார்களே அவர்கள் கதி யென்ன? அவர்களும் மற்றவர்களைப்போல் உண்டு உடுத்து இருந்தவர்கள்தானே? இவர்களெல்லோருக்கும் உய்யும் வழியில்லையா? மேலும் நாம் கொடுக்கிற தானங்களில் உணவு பதார்த்தங்களாக கொடுப்பதாகிலும் ஏதோ புரோகிதன் வீட்டுக் குடும்பங்களுக்கு அல்லது அவரது தாசிக்கு இரண்டு நாளைக்குப்பசி ஆற்றுகிறது. மாட்டு வாலைப்பிடித்துக் கொண்டு பிதுர்க்கள் மோட்ச உலகம் போகிறார்களென்று நினைத்து பசு தானம் செய்வது பொருத்தமுடையதா? அப்படிக் கொடுப்பதாகவே வைத்துக் கொண்டாலும் சகல பதார்த்தங்களுக்கும் ஒரு தர்ப்பையை நீட்டி அந்தக் காய்ந்த புல் மூலமாய் ஒப்புக்கொண்டிருக்க பசு விஷயத்தில் மட்டும் என் தர்ப்பை செல்லாது? செல்லாவிட்டாலும் கிழட்டு மாடு ஏன் கூடாது? கன்றோடு கறவை மாடு எதற்கு? அதுவும் வேளைக்கு 3 படி பால் கறக்கக்கூடிய சுமார் 75 ரூபாய் பெறுமானது எதற்கு? இதெல்லாம் சரிவர இல்லாவிட்டால் சண்டையும் அதிருப்தியும் தானே? நாம் கொடுக்கிறதை அப்படியே அய்யர் பிதுர்க்களுக்கு கொடுக்கிறதுதானே? இவருக்கு தாருக்கு பணமும் கொடுத்துவிடுகிறோம். மாடு பால் குறைந்தாலோ அல்லது கிழட்டு மாடாயிருந்தாலோ சண்டை யிடுபவர்கள் நமது பிதுர்க்கள் தானே? அப்படியவர்கள் கேட்டால் நாம் ஏதோ சமாதானம் சொல்லிவிட்டால் போகுது; அய்யர் ஏன் சம்மதிக்க மாட்டேனென்கிறார்? இதிலிருந்தாவது ஆண்டவன் நமக்கு பகுத்தறிவு தர வேண்டாமா?

### எல்லாம் ஏமாற்றமே.

ஆகையால் சுருங்கச் சொல்லுமிடத்து தந்திரசாலிகளாகிய பிராமணர்கள் படித்திருந்தபடியாலும் பெருங்கூட்டமாகிய திராவிடர்கள் தங்களை மதிக்கவேண்டும் என்கிற எண்ணத்தாலும் வெளிநாட்டிலிருந்து இங்கு வந்தவர்களானபடியாலும் விவசாயம், வியாபாரம் முதலிய தொழில்கள் செய்வதற்கு முடியாமலும் போதிய ஜனத்தொகை பூமி காணி இல்லாமலிருந்தபடியாலும் தங்கள் ஜீவனோபாயத்துக்குக் கஷ்டப்பட்டு சம்பாதிப்பது சாத்திய மில்லாமலிருந்தபடியாலும் மிகவும் புத்திசாலித்தனமாக சில நூல்களை உண்டாக்க முயற்சித்தார்கள். இப்போது நாங்களெல்லாம் படித்து விஷயம் தெரிந்து கொண்டோ மென்றிருக்கிற இக்காலத்திலேயே புரட்டுக் கதைகளை நம்பி மூட பக்தியிலீடுபட்டிருக்கிறோம். அதை யாராவது தப்பு என்று சொன்னல் அந்தப் புராணத்தில் அப்படிச் சொல்லுது; இந்தப் புராணத்தில் இப்படிச் சொல்லுது என்று நாமே வக்காலத்து வாங்கிக்கொள்கிறோம். ஏனென்றால் ஒருவர் வாயில் சொல்லுவதைவிட புத்தகத்தில் எழுதிவிட்டு இந்த ரிஷி சொன்னர்; அந்த ரிஷிசொன்னர் என்றிருந்தால் முற்றிலும் நம்பியே ஒப்புக் கொண்டு வருகிறோம். மற்றதை ஏன் சொல்லவேண்டும்?

இப்போது பிரம்மஞான சங்கம் என்று ஒன்றிருக்கிறது. அதில் சேர்ந்திருப்பவர்களெல்லாம் நல்ல படிப்பாளிகள் என்று சொல்லிக் கொள்பவர்கள். [illegible] செய்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள். பல நூல்களைப் பார்த்து மிருப்பவர்கள். இன்றைக்கு பெரிய மகாத்மாக்களெல்லாம் டாக்டர். பெஸண்டம்மையார், மிஸ்டர் லெட்பீடா துரை இவர்களோடு தினம் பேசுகிறார்களென்றும் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியென்ற ஒரு பிராமணச்சிறுவருடைய நிரேகத்தை எடுத்துக் கொண்டு ஒரு லோக குரு வரப்போகிறாரென்றும் அதற்காக இந்த சரீரத்தை வெகு பக்குவமாக வளர்ப்பதாயும் ஆகையினலே அடிக்கடி அவருக்கு உடம்பு சீர் கெட்டுப் போய் வருகிற தென்றும் இருந்த போதிலும் அது லாயக்குடையது தானென்றும் சீக்கிரம் ஜெகத்குருபிரவேசம் ஆகப் போகிறார் என்றும் இந்த இருபதாவது நூற்றாண்டிலும் மெய்யென்று நம்பும்போது ஒன்றும் அறியாமல் எழுத்து வாசனையே யில்லாத பாமரர்களிடம் பிராமணன் பிரம்மாவின் முகத்தில் பிறந்தவன்; மற்றவன் அவனுக்கடிமை; பிராமணனுக்கு கொடுத்தால் தான் தருமம்; மற்றவனுக்கு கொடுப்பது பாவம்; பிராமணன் தான் எல்லோரையும் மோக்ஷத்துக்கு அனுப்புகிறவன்; அவன்தான் வேதம் படிக்கவேண்டும்; சமஸ்கிருதம் படிக்க வேண்டும்; மற்றவன் படித்தால் நரகம் அடையவேண்டும்; பரிகாரமாக ஈயத்தைகாய்ச்சி காதில் ஊத்தவேண்டும்; அல்லாவிட்டால் பிராமணனுக்கு தானமாக இவ்வளவு பொன் கொடுக்கவேண்டும்; ஒவ்வொரு கூட்டத்திற்கும் குல குரு பிராமணன் தான்; அவனுக்கு கல்யாணமான குடும்பஸ்தர்கள் வருடா வருடம் வரி கொடுத்து வரவேண்டும்; கோவிலுக்கு பூசைசெய்கிறவன் பிராமணனக இருக்கவேண்டும்; அதில் இந்த இந்த அர்ச்சனைக்கு இன்னஇன்ன பலன்; அதற்கு வரி இவ்வளவு; இதை தவிர லோக குருவென்று ஒருவருண்டு; அவர் இந்த ஹிந்து மதத்தையே ஸ்தாபித்தவர்; அவருக்கு எல்லோரும் பவுன் ரூபாய்களைக் கொண்டு அர்ச்சனைசெய்ய வேண்டும் என்று சொன்னல் பாமர மக்கள் நம்பார்களா? அதற்குச் சான்றாக முன்காலத்தில் ராஜ ராஜாக்கள் நடத்திக்காட்டியதாக புராணங்கள். அதற்குச் சான்றாக ஒரு சூளுரை சொல்வது போல நான் அதை செய்திருப்பனேல் இன்ன இன்ன பாவத்துக்கு ஆளாவேன் என்று சொல்வது போலவும் எழுதி வைத்துக் கொண்டு அந்தக் கட்டுக் கதைகளை நமக்கு கடவுளால் சொல்லப்பட்டதாக ஆதாரங்களாக காட்டி இவர்கள் ஒரு தேசத்திலிருந்து மறுதேசத்திற்கும் ஒரு ஊரிலிருந்து மறு ஊருக்கும் போகும் போது வழியில் சாப்பாட்டுக்காக வேண்டி பிராமண போஜன சாலைகளையும் அன்னச்சத்திரங்களையும் ஒன்றுமறியாத ராஜாக்களையும் பணக்காரர்களையும் கொண்டு கட்டி வைத்து, சத்திரச் சொந்தக்காரர்கூட அந்த சத்திரத்தில் சாப்பிடுவது தோஷம் என்று வேறு சமையலோ அல்லது ஓட்டல் சோறோ வாங்கி வந்து சாப்பிடும்படியாக செய்திருப்பதான அவர்களுடைய முன் யோசனையையும் கூர்மையான தந்திரத்தையும் மெச்ச வேண்டியதுதான்.

ஆனல் ஏமாறுகிறவர்கள் உலகத்திலிருந்தால் நாமும் நம் சக்தியனுசாரம் ஏமாற்றத்தான் பார்ப்போம். ஆனல் நமக்கு ஏமாற்ற ஆள்க்கிடையாத குறைதான். ஆகவே பிராமணர்கள் பேரில் குற்றம் சொல்லுவது தப்பு. குற்றமெல்லாம் நம்முடையது. நமக்குப் பகுத்தறிவு வந்து இதெல்லாம் ஹம்பக் மூடக்கொள்கை என்று நாம் சுயமரியாதையை நாடி நமக்கு நாமே எஜமான்; எனக்கு மேற்பட்டவன் அய்யருமல்ல ஆச்சாரியுமல்ல என்ற தெளிவு வந்துவிட்டால் பாவம் ஏழை பிராமணர் நம்மை அடிப்பதுமில்லை பிடிப்பதுமில்லை. அவர்களும் "இனி இந்த ஏமாற்றுப் பிழைப்புக்கு வழியில்லை" யென்று நினைத்து "சரி நீயும் நானும் ஒன்று தான். இருவரும் சமம்தான். உன் கஷ்டம் என்கஷ்டம். உன் சுகம் என்சுகம்" என்று படியை விட்டு இறங்கிவிடுவார்கள். அதை விட்டு இன்னமும் புராணம், வேதம், மனு, ஸ்மிருதி இவைகளை நம்பிக் கொண்டு பணப்பையை திறந்து வைத்துக் கொண்டிருந்தால் இன்னும் [illegible] எத்தனை 'திராவிடன்', எத்தனை கண்ணப்பர் வந்தாலும் நாம் அடிமை அடிமையே. பூணூல் போட்ட பிராமணர் எஜமான் எஜமானே.

### அதைத்தான் சொல்லுகிறேன்.

"ஏனையா! திதி என்று ஆரம்பித்து அதை முடிப்பதற்குள் வேறென்ன என்னமோ சொல்லப் போய் விட்டீர்" என்று கோபிக்காதீர்கள். இப்போது சொன்னவைகளும் அதனுடைய அண்ணன் தம்பிகளானபடியால் அதைச் சற்று விளக்கினேன்.

நிற்க, முதலாவது திதி செய்வதே மிகவும் பொருத்தமற்றது. அதிலும் இப்போது செய்கிற மாதிரி செய்வது சுயமரியாதை யற்றது; மானக் கேடானது. இந்த மாதிரி மூடக் கொள்கைகளைக் கண்டுதான் மிஸ். மேயோ ஒரு புத்தகம் எழுதத் துணிந்தார். வெள்ளைக் காரர்களும் நம்மை சுயராஜ்யத்துக்கு இன்னும் லாயக்கில்லை என்கிறார்கள். புராணக் குப்பைகளுக்கு கட்டுப்பட்டு கடலில் ஒரு துளி போன்ற கூட்டத்தாருக்கு அடிமைப் பட்டுக் கிடக்கிற இந்தியா தேசத்திற்கு வருஷம் எழுபது கோடி ரூபாய் செலவில் வைத்திருக்கிற ராணுவ பலங் கொண்ட பிரிட்டிஷ் காரர்கள் மதித்து ராயல் கமிஷனில் இந்தியர்களை நியமிப்ப தென்பது அவ்வளவு சுலபமா?

### முடிவாக

நமக்குள் திதியில் நம்பிக்கையுள்ளவர்கள் பிதுர்க்கள் தினத்தன்று தங்கள் உற்றார், சுற்றத்தார், தாயாதி, பந்துக்களை தம் சக்திகேற்ப வரவழைத்து தங்கள் வீடு வாசலை சுத்திசெய்து சம்பிரமாக சமையல் செய்து படைப்புப் போட்டு பிதுர்க்களை மனத்தில் தியானித்து ஏழை எளியவர்களுக்கும் ஏதாவது உபசாரம் செய்து போஜனம் அளித்து எல்லோருடனும் உண்டானந்திக்க வேண்டியது. இதிலும் ஒரு விஷயம். அநேகமாய் பிதுர்க்கள் இறந்துபோன நாள் தெரிகிறதில்லை. அதற்காக "மறந்ததற்கு மாளய பக்ஷம்" என்று சொல்லி பாக்கிப் பேரையும் ஏமாற்றி புரோகிதர்கள் மூட்டை கட்டுகிறார்கள். ஆகையால் பிதுர்தினம் தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் வருஷத்தில் ஏதோ ஒரு நாள் பெற்றோர்களைப் பூஜிக்கலாம். குறிப்பாக பிராமணனுக்கே கொடுக்கவேணும் என்ற கண்டிப்பையே தகர்க்க வேண்டுமென்பதுதான் இக்கட்டுரையின் சாரமாகும்.

ஆனல் அப்படி சீர்திருத்தம் செய்பவர்களில் ஏழை மக்களைவிட ஊருக்குப் பெரியதனக்காரர்கள், பணக்காரர்கள், பெருங்குடி மக்கள், செல்வாக்குடையவர்கள் முன்னணியில் நின்றால் வெகு சீக்கிரத்தில் 'சுயமரியாதை' பரவிவிடும்.

அந்தக் காலமும் சமீபத்திலிருப்பதாகவே நம்புகிறேன்.

---

## இனம்! இனம்!!

படுக்கை யறையை அலங்கரிக்கும் பிரெஞ்சு லேடிகளின் அழகிய பெட்ரும் போட்டோ படங்கள் 50 எங்களுடைய உயர்ந்த 14 கே. டி. ஃபௌன்டன் பேனா வாங்குவோர் ஒவ்வொருவருக்கும் இனம் கொடுக்கப்படும். உடனே ஆர்டர் செய்யுங்கள்.

ரூபாய் 1—8—0. விலாசம்:—

கேளரி அண்டு கோ,
22-வது பீட்,
ஜியார்ஜ் டவுன், மதராஸ்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection